இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 30 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 22 – வெள்ளிக்கிழமை 08 செப்டம்பர் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 30 : Thiruvalluvar Year - 2054 - Aavani 22 - Friday 08 September 2023 - Madurai 10 Pages ₹ 5.00

## அமைச்சர் உதயநிதி பேச்சின் முழு விபரம் அறியாமல் பிரதமர் பேசுவதா? பழம் பெரும் பேரியக்கமான

# தி.மு.கழகம் மீது களங்கம் கற்பித்தால் - அந்தப் புதைகுழியில் பா.ஜ.க.தான் மூழ்கும்!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, செப். 8-**

**“அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய முழு விவரம் அறியாமல் ஒன்றியப் பிரதமர் அவர்கள் பேசுவதா?” என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற சனாதன எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், சனாதனம் குறித்த சில கருத்துகளைத் தெரிவித்தார்.

### எந்த மதத்தையும் புண்படுத்தும் வகையில் உதயநிதி பேசவில்லை!

பிற்படுத்தப்பட்டோர் - பட்டியலினத்தவர் - பழங்குடியினர் - பெண்ணினத்திற்கு எதிரான ‘சனாதனக் கோட்பாடுகளை ஒழிக்க வேண்டும்’ என்றுதான் அமைச்சர் பேசினாரே தவிர, எந்த மதத்தையும் - மத நம்பிக்கைகளையும் புண்படுத்தும் வகையில் பேசவில்லை.

பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வையும் பெண்ணடிமைத்தனத்தையும் நியாயப்படுத்தும் பழமைவாத வர்ணாஸ்ரம மனுவாத சனாதனச் சிந்தனைகளுக்கு எதிராக, இந்தியத்



துணைக்கண்டத்தில் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், ஜோதிபா பூலே, நாராயணகுரு, வள்ளலார், வைகுண்டர் என பல பெரியோர்கள் குரல் கொடுத்து வந்துள்ளனர். அந்த மரபின் நீட்சியாக, சாதியின் பெயராலும் சாஸ்திரங்களின் பெயராலும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை, பெண்களின் சமத்துவ வேட்கையை மறுத்து சுரண்டலை நியாயப்படுத்துவதற்கு எதிரான கருத்தியல் ரீதியான வாதங்கள் இந்திய தேசத்தின் பல முனைகளில் இருந்தும் தொடர்ந்து ஒலிப்பதை சமூகவியல் ஆய்வாளர்கள் அறிவார்கள்.

நிலவுக்குச் சந்திரயான் விடும் இந்தக் காலத்திலும் சாதி வேற்றுமைகள் கற்பித்தும், வர்ணாசிரமக் கருத்துகளைச் சொல்லி பாகுபாடுகளை வலியுறுத்தியும், இந்தப் பிளவுபடுத்தும் எண்ணங்களுக்கு ஆதரவாக சாஸ்திரங்களையும், சில பழைய நூல்களையும் மேற்கோள் காட்டியும் சிலர் பிரச்சாரம் செய்து வரத்தான் செய்கிறார்கள்.

### மாநில ஆளுநரே குழந்தைத் திருமணத்தை ஆதரித்துப் பேசுகிறார்!

குழந்தைத் திருமணத்தை ஆதரித்து மாநிலத்தின் ஆளுநரே பேசுகிறார். குழந்தைத் திருமணம் செய்தவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தால், அதற்கும் தடை போடுகிறார். ‘நானே குழந்தைத் திருமணம் செய்து கொண்டவன்தான்’ என்றும், அந்த எண்ணங்களை நியாயப்படுத்திப் பேசி வருகிறார். பெண்களை இழிவுபடுத்தியும், அவர்கள் வேலைக்குப் போகக் கூடாது என்றும், கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்றும், மறுமணத்துக்கு மந்திரமே கிடையாது என்றும் இன்னமும் சிலர் ஆன்மீக மேடைகளில் பேசி வருகிறார்கள்.

சமூகத்தின் சரிபாதிக்கும் அதிகமான பெண் இனத்தை ‘சனாதனம்’ என்ற சொல்லை வைத்துத்தான் அடிமைப் படுத்த நினைக்கிறார்கள். இத்தகைய அடக்குமுறைச் சிந்தனைகளுக்கு எதிராகத்தான் அமைச்சர் உதயநிதி பேசினார். இத்தகைய கொள்கைகளை முற்றிலுமாக ஒழித்தாக வேண்டும் என்று சொன்னார்.

### அமைச்சர் உதயநிதி பேசியதாக பொய்யைப் பரப்பும் கூட்டம்!

இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத பா.ஜ.க. ஆதரவு சக்திகள், ‘சனாதன எண்ணம் கொண்டவர்களை இனப்படுகொலை செய்யச் சொன்னார் உதயநிதி’ என்று பொய்யைப் பரப்பினார்கள். இத்தகைய பொய்யைப் பரப்புவதற்காக பா.ஜ.க.வினரால் திட்டமிட்டு வளர்க்கப்படும் சமூக வலைதளக் கும்பலானது, இதனை வட மாநிலம் முழுவதும் பரப்பியது. ‘இனப்படுகொலை’ என்ற சொல்லை தமிழிலோ, ஆங்கிலத்திலோ அமைச்சர் உதயநிதி எந்த இடத்திலும் சொல்லவில்லை. ஆனால் அப்படிச் சொன்னதாகப் பரப்பினார்கள்.

பொய்யர்கள்தான் இதனைப் பரப்புகிறார்கள் என்றால், பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர்கள், பா.ஜ.க. முதலமைச்சர்கள் உண்மையில் அமைச்சர் உதயநிதி என்ன பேசினார் என்பதைத் தெரிந்து கருத்து சொல்லி இருக்க வேண்டும். மாறாக, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டவர்கள் அதே பொய்ச்செய்தியையே பரப்பி உதயநிதியைக் கண்டித்துள்ளார்கள்.

### அமைச்சரின் தலைக்கு விலை பேசிய ஆன்மீகவாதி மீது வழக்கு உண்டா?

‘நான் அப்படிப் பேசவில்லை’ என்று அமைச்சர் உதயநிதி தெரிவித்துவிட்ட பிறகாவது, தங்களது பேச்சுகளை ஒன்றிய அமைச்சர்கள் மாற்றி இருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யவில்லை.

### சனாதனம் மறுத்ததை சாத்தியம் ஆக்கியது தி.மு.க.!

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி ஒருவர், அமைச்சர் உதயநிதியின் படத்தை எரித்து, ‘தலைக்கு 10 கோடி’ என்று விலை வைத்திருப்பதும் அதனை பா.ஜ.க. ஆதரவு சக்திகள் பரப்புவதும் தான் இவர்களது பாணியா?

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

## நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.434.65 கோடியில்

# பாலங்கள் - சாலைகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 8-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.9.2023) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 280 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடமாக மேம்படுத்தப்பட்ட மோகனூர் - நாமக்கல் - சேந்தமங்கலம் - இராசிபுரம் சாலை, திருவொற்றியூரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே 58 கோடியே 64 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நான்குவழித்தட உயர்மட்ட பாலம், திருப்பூர் மாவட்டத்தில், 53 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட பல்லடம் தாராபுரம் சாலை மற்றும் கோயம்புத்தூர் நகரில், கோயம்புத்தூர் - மேட்டுப்பாளையம் சாலை மற்றும் கணபதி மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பில் 41 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலைத் துறை வாயிலாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

### மோகனூர் - நாமக்கல் - சேந்தமங்கலம் - இராசிபுரம் சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடச் சாலையாக தரம் உயர்த்துதல்

சென்னை - கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் 280 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில், நாமக்கல் மாவட்டம், மோகனூர் - நாமக்கல் - சேந்தமங்கலம் - இராசிபுரம் சாலையில் (மா. நெ - 95) 31.50 கிலோ மீட்டர் நீளத்திற்கு கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடமாக தரம் உயர்த்தப்பட்ட சாலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இத்திட்டத்தில், 5 புறவழிச்சாலைகள், மழைநீர் வடிகால்கள், 53 குறு மற்றும் 3 சிறு பாலங்கள், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்ய தெரு விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்தில், முத்துகாப்பட்டி, சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி, பேளுக்குறிச்சி மற்றும் சிங்களாந்தபுரம் ஆகிய முக்கிய ஊர்களுக்கு புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளதால் கனரக வாகனங்கள் போக்குவரத்து நெரிசல் மற்றும் பயண நேரம் குறையும். நாமக்கலின் முக்கிய சுற்றுலா தலமான கொல்லிமலைக்கு சென்னை, பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் இருந்து வரும் வாகனங்கள் எளிதாக செல்ல முடியும். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 21க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாய விளைப்பொருட்களை எளிதாக எடுத்துச்செல்ல முடியும்.

### திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்ட பாலம் மற்றும் சாலையை அகலப்படுத்தும் பணி

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ், 58 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாவட்டம்,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.9.2023) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 280 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடமாக மேம்படுத்தப்பட்ட மோகனூர் – நாமக்கல் – சேந்தமங்கலம் – இராசிபுரம் சாலை, திருவொற்றியூரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே 58 கோடியே 64 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நான்குவழித்தட உயர்மட்டபாலம், திருப்பூர் மாவட்டத்தில், 53 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட பல்லடம் – தாராபுரம் சாலை மற்றும் கோயம்புத்தூர் நகரில், கோயம்புத்தூர் – மேட்டுப்பாளையம் சாலை மற்றும் கணபதி மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பில் 41 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 08-09-2023

# பாரத்! அதாவது, ஆர்.எஸ்.எஸ். அஜெண்டா!

இந்த நாட்டுக்கு பாரதம் என்று பெயர் வையுங்கள் என்று இதுவரை சொல்லிக் கொண்டிருந்த ஒரு அமைப்பு ஆர்.எஸ்.எஸ். அதைச் செய்யப் போகிறார் பிரதமர். சில நாட்களுக்கு முன்னால் அசாம் மாநிலம் குவாஹாடியில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதில் கலந்து கொண்டார் ஆர்.எஸ்.எஸ். தலைவரான மோகன் பகவத். அதில் அவர் பேசும் போது…

“இனி இந்தியாவை பழைய பெயரான ‘பாரத்’ என அழைக்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக பாரத் என்றுதான் இந்தியா அழைக்கப்பட்டு வந்தது. இந்தியா என்று நாம் அழைப்பதை நிறுத்தினால்தான் மாற்றம் வரும். பாரத் என்று அழைத்து மற்றவர்களுக்கும் இதனை நாம் உணர்த்த வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

‘இந்தியா’ கூட்டணி என்ற பெயரைப் பார்த்து ஏற்கனவே பீதி அடைந்து வந்த பிரதமர் நரேந்திரமோடிக்கு, மோகன் பகவத் கோரிக்கை தேனாக இனித்தது. உடனே ‘பாரத்’ என்று சொல்லத் தொடங்கி விட்டார். டெல்லியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டுக்கான அழைப்பிதழில் ‘இந்தியா’ என்பதற்கு பதிலாக ‘பாரத்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ‘நம்மை இந்தியாதானே அழைத்தது? பாரத் நாட்டுக்கு போகப் போகிறோமே?’ என்று வெளிநாட்டவர்களுக்கு குழப்பம் வரலாம்.

‘பாரத்’ என்று சொல்லத் தொடங்கிய பிறகு பா.ஜ.க.வின் தேசீய சீலர்கள் ‘இந்தியா’ என்ற சொல்லை தேச விரோதச் சொல்லைப் போலச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். எழுத ஆரம்பித்து விட்டார்கள். ஒரு நாளிதழ் எழுதிய தலையங்கத்தில் ‘இந்தியா’ என்ற சொல்லை மென்று துப்பி இருக்கிறது. ‘தேசவிரோதத் தலையங்கம்’ என்று வழக்குப் போடலாம்! அந்தளவுக்கு குமட்டல் எடுக்கும் சொல்லாக ‘இந்தியா’ மாறிவிட்டது.

‘இந்தியா’ என்பது வெள்ளைக்காரன் வைத்த பெயராம். காலனி ஆதிக்கச் சொல்லாம். இதெல்லாம் இவர்களுக்கு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கழித்துத்தான் தெரிகிறதா?

2014 ஆம் ஆண்டு பிரதமராகப் பதவி ஏற்றார் மோடி. பத்தாண்டு காலம் அவர்களுக்கு ‘இந்தியா’வின் வரலாறு தெரியவில்லையா? 1998 முதல் 2004 வரை ஆண்ட வாஜ்பாய்க்கு ‘இந்தியா’ என்பது வெள்ளைக்காரன் வைத்த பெயர் என்று தெரியாமல் போனதே? எவ்வளவு அப்பாவியாக இருந்திருக்கிறார் வாஜ்பாய்?!

இந்தியா என்பது நாடு அல்ல, ஒரு கண்டம் என்றும், பல்வேறு தேசிய இனங்கள் வாழ்கிறார்கள் என்றும், மாநிலங்களின் ஒன்றியம் என்றும் திராவிட இயக்கம் சொல்லும் போதெல்லாம், ‘நாம் இந்தியர்கள் – இந்தியர்களுக்கு விரோதமாகப் பேசும் இவர்கள் ஆண்ட்டி இண்டியன்ஸ்’ என்று சொல்லி வந்தார்களே. இப்போது இவர்கள் ‘இந்தியனுக்கு’ எதிரான ஆண்ட்டி இண்டியன்ஸ் ஆகிவிட்டார்களே! இவர்களது தேசபக்தி திடீரென மாறியது ஏன்?

‘இந்தியா கூட்டணி பெயரை பாரத் என்று மாற்றிவிட்டால் அதையும் மாற்றிவிடுவார்களா?’ என்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கேட்பது நியாயம்தானே? பாரதம், பாரத தேசம், அகண்ட பாரதம் – என்பதெல்லாம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குறிச்சொற்கள். பாரத் – என்பதை பின்னர் ஹிந்துராஷ்டிரமாக ஆக்குவதே அவர்களது உள்ளீடு ஆகும். இதனை ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல்வால்கர் பலமுறை சொல்லி இருக்கிறார்.

“பாரதத்தின் தேசிய வாழ்க்கை சிறப்பானது. அது வெளிநாட்டவர் வருவதற்கு முந்தைய காலத்திலேயே வேரூன்றியுள்ளது. இந்த பாரதிய தேசிய வாழ்க்கை என்பது என்ன?” என்று சொன்னவர் கோல்வால்கர். ‘பரந்து விரிந்த இந்த பாரத பூமி எனது தாய்நாடு’ என்பதை திரும்பத் திரும்ப அவர் சொல்லி வந்தார். அதைத்தான் இன்று வரை ஆர்.எஸ்.எஸ். சொல்லி வருகிறது.

‘இந்தியா என்ற சொல் பிரிட்டிஷ் இந்தியாவையும், இந்தியாவின் கவர்னர் ஜெனரலின் கீழோ அல்லது வேறு அதிகாரியின் மூலமோ மாட்சிமை தங்கிய மகாராணியாரின் மேலதிகாரம் செலுத்தப்படும் எந்த ஒரு சுதேசி அரசருக்கும் அல்லது தலைவருக்கும் உரிய பிரதேசங்களையும் சேர்த்துக் குறிக்கும்’ என்று இந்தியச் சட்டம் – 1889 சொல்கிறது. இந்தியாவை உருவாக்கியவர்களே பிரிட்டிஷார்தான். அதற்குத் தான் ‘இந்தியா’ என்று பெயர் வைத்தது சரியா? ‘பாரத்’ என்று வைக்கலாமா? என்று 75 ஆண்டுகள் கழித்து சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

★ **இந்தியா கூட்டணியை பழிவாங்கவும் –**

★ **ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவை நிறைவேற்றவுமே இப்போது பாரத நாடகங்கள் நடக்கின்றன.**

அரசியலமைப்புச் சட்டத்திலேயே இடையில் சொருகப்பட்டதுதான் ‘பாரத்’ ஆகும். 1947 ஜூலையில் எழுதப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பதிவுக் குறிப்பில் ‘இந்தியா’ மட்டும்தான் இருக்கிறது. 1948 அக்டோபரில் ‘இந்தியா’ என்பதே ஏற்றுக் கொள்ளப்பட்டது. ‘பாரதவர்ஷம்’ என்று பெயர் சூட்டச் சொன்னபோது அண்ணல் அம்பேத்கரும், நேருவும், ஆசாத்தும் நிராகரித்தார்கள். 1949 செப்டம்பர் 17 கொண்டு வரப்பட்ட திருத்தத்தில் ‘இந்தியா அதாவது பாரத்’ என்பது ஏற்றப்பட்டது. அதற்கான விளக்கம் தரப்படவில்லை.

**இரண்டு ஆண்டுகள் விவாதம் செய்த அரசியல் நிர்ணய சபையே இக்காலப் பட்டிமன்றத் தீர்ப்பைப் போல – ‘இந்தியா அதாவது பாரத்’ என்று சொல்லிப் போனது. அதில் குறைகண்ட பா.ஜ.க., ‘பாரத்’தை மட்டும் வைத்துக் கொள்ளப் பார்க்கிறது.**

**பா.ஜ.க. என்ற பாரம் இறங்கினால் இந்தியா நிம்மதி ஆகிவிடும்!**

## காஞ்சிபுரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

*காஞ்சிபுரம், செப். 8 -*

*காஞ்சிபுரத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில் வேளாண் இயந்திரமயமாக்கல் உப இயக்க திட்டத்தின் கீழ் கிராம விவசாயிகளுக்கு ரூ.1.73 கோடி மதிப்பிலான 198 பவர் டில்லர், 4 விசை களையெடுப்பான் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்களை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊராட்சி குழு த்தலைவர் ஆ. மனோகரன், மேயர் மகாலட்சுமி, மலர்கொடி, நித்தியா சுகுமார், கு.துரைவேலு மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.9.2023) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமூக நல இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர் திருமதி ச.ப.கார்த்திகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை - காமராஜர் சாலையில் ரூ.9.82 கோடியில்

# சமூக நல இயக்குநர் அலுவலகக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 8-**

**சென்னை காமராஜர் சாலையில் ரூ.9.82 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சமூக நல இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.9.2023) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமூக நல இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் அனைத்து வளர்ச்சியிலும் பெண்களுக்கு உரிய இடம் வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை என்ற பெயரை “சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை” என மாற்றம் செய்து, பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், திருநங்கையர் போன்றவர்களின் நலனை காத்திடும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் மகளிரின் கல்வி, சுகாதாரம், குடும்ப வாழ்க்கை, பொருளாதாரம் மற்றும் சம உரிமைகளை உறுதிப்படுத்த சமூக நல இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை உறுதி செய்யும் தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண்களின் கல்வியை ஊக்குவிக்கும் புதுமைப் பெண் திட்டம், திருமண உதவித் திட்டங்கள், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளிக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம்,

இலவச சீருடை தைத்து வழங்கும் திட்டம், திருநங்கையருக்கு அடையாள அட்டை வழங்குதல், தொழில் தொடங்கிட மானியம் வழங்குதல், 40 வயதுக்கு மேற்பட்ட திருநங்கைகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல், முதியோர் இல்லம் நடத்துதல், குழந்தைகள், பெண்கள், முதியோர் நலத்திற்கு கூடுதல் பலன் சேர்க்கும் விதமாக சமூக நீதிச் சட்டங்களான வரதட்சணை ஒழிப்புச் சட்டம், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், பணிபுரியும் இடங்களில் பெண்களை பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலச் சட்டம் ஆகியனவும் சமூக நல இயக்ககத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சமூக நல இயக்ககத்திற்கு சென்னை, காமராஜர் சாலையில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன், 26,044 சதுர அடி பரப்பளவில் 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமூக நல இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இக்கட்டடத்தில் சுமார் 120 பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணிபுரியும் வகையில் அலுவலகக் கட்டடங்கள், இரண்டு கூட்டரங்குகள், மின்தூக்கி வசதி உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர் திருமதி ச.ப.கார்த்திகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

*சென்னை, செப்.8-*

*சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் நாளை (09.09.2023 - சனிக்கிழமை) குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.*

*சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் நாளை (09.09.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.*

*இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:*

*பகுதி அலுவலகம்-1-திருவொற்றியூர், பகுதி அலுவலகம்- 2-மணலி பகுதி அலுவலகம்-3 -மாதவரம், பகுதி அலுவலகம்-4 -தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 -இராயபுரம், பகுதி அலுவலகம்-6 -திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 -அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 -தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 -வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 -ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 -பெருங்குடி, பகுதி அலு வலகம்-15-சோழிங்கநல்லூர்*

*இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.*



## மணிப்பூர் கலவரம், ஏழரை லட்சம் கோடி ஊழலை மறைக்கவே சனாதனக் கம்பைச் சுழற்றுகின்றனர் பா.ஜ.க.வினர்!

# நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரிகள் அல்ல - எனது பேச்சை திரித்துக் கூறுகின்றனர்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம்!

சென்னை, செப். 8 -

**'சனாதன ஒழிப்பு' மாநாட்டில், தாம் பேசிய கருத்துகளை பா.ஜ.க.வினர் திரித்து அவதூறு பரப்பி வருவது, அதற்கு கழகத் தினர் பலர் ஆங்காங்கே வழக்கு, உருவ பொம்மை எரிப்பு போன்ற செயல்களில் ஈடுபடுவது குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-**

**செயல் வீரர்கள்!**

**வணக்கம்.**

டிசம்பர் 17-ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்கு இளைஞர்களைத் தயார்படுத்தும் வகையில் வருவாய் மாவட்டந்தோறும் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்துவது, கழக மூத்த முன்னோடிகளுக்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் பொற்கிழி வழங்குவது, மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அரசின் நலத்திட்டப் பணிகள் குறித்து, ஆய்வுக் கூட்டத்தை நடத்துவது... இந்த மூன்று விஷயங்களை மையமாகக் கொண்டே என் சமீபகால மாவட்டச் சுற்றுப்பயணங்களை அமைத்துக்கொள்கிறேன்.

அந்த வகையில், இந்த மாதம் 4-ஆம் தேதி மதியத்துக்கு மேல் தூத்துக்குடி, 5-ஆம் தேதி தென்காசி ஆகிய மாவட்டங்களுக்குச் செல்ல முடிவு செய்தோம். 4-ஆம் தேதி காலை தலைமைச் செயலகத்தில், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கடந்த ஆண்டு சாதனை படைத்த வீரர்- வீராங்கனைகள் 134 பேருக்கு உயரிய ஊக்கத் தொகையாக 2 கோடியே 24 லட்சம் ரூபாயை முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிகழ்ச்சியில் பங்கேற்றோம்.

**முதல்வர் அண்மையில் வெளியிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணை!**

அதைத்தொடர்ந்து, கடந்த ஆண்டு தேசிய அளவில் சாதனை படைத்த மாற்றுத்திறனாளி வீரர் - வீராங்கனையர் 52 பேருக்கு உயரிய ஊக்கத் தொகையாக ஒரு கோடியே 80 லட்சம் ரூபாயை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினோம். 'தேசிய அளவில் சாதனை படைக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் உயரிய ஊக்கத் தொகைகளை வழங்க வேண்டும்' என்பது, அவர்களின் 20 ஆண்டுகாலக் கோரிக்கை. அதன் தீர்வாக, 'சீனியர் - ஜூனியர் பிரிவுகளில் தேசிய அளவில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெறுபவர்களுக்கு முறையே தலா 5, 3, 2 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்படும்' என்று வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணையை முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் வெளியிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பிறகு, சென்னையில் இருந்து தூத்துக்குடி பயணமானோம். தூத்துக்குடி விமான நிலையத்தில் கழகத்தினரின் வரவேற்பைப் பெற்றுக்கொண்டு வெளியே வரும்போது சகோதரர் ஜஸ்டின் என்னைச் சந்தித்து இளைஞர் அணி மாநாட்டு நிதியாக ரூ.50 ஆயிரத்துக்கான காசோலையை வழங்கினார். ஜஸ்டினைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்வது அவசியம். ஜஸ்டின் ஒரு மாற்றுத்திறனாளி. தன்னுடைய வாழ்க்கையைத் தானே மாற்றும் வல்லமை படைத்த ஒரு திறனாளி. அவருக்குத் தேவை ஓர் உந்துதல். அதற்காக என்னைக் காண இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை வந்திருந்தார். அவருக்கு தூத்துக்குடி மாநகரில் பழச்சாறு விற்கும் கடையை இளைஞர் அணியின் சார்பில் அமைத்துத் தந்தோம். இன்று அவர் பிறருக்கு உதவி செய்யும் இடத்துக்கு வந்ததில் மகிழ்ந்தேன்.

**ஜோயல் இல்லத்தில் கழகக் கொடி ஏற்றி வைத்தேன்!**

விமான நிலையம் அருகிலேயே புதுக்கோட்டை நல்லமலைப் பகுதியில் அமைந்துள்ள கழக இளைஞர் அணியின் துணைச் செயலாளர் ஜோயல் அவர்களின் இல்லத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தோம். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சூழ்ந்து நின்று வரவேற்றனர். அங்கிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றோம். தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் சார்பில், அரசு நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினோம். அதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம்.

ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்படும் மக்கள் நலப் பணிகள், அதன் தற்போதைய நிலை... எனத் தரவுகளின் அடிப்படையில் ஒவ்வொரு துறையாகப் பார்த்து அதற்கான விளக்கங்களை அதிகாரிகளிடம் பெறுவது, என மிக விரிவாக மூன்று மணி நேரம் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் நம் முதலமைச்சர் அவர்கள் தீட்டும் மக்கள் நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்கள் வரை சென்று சேரவேண்டும் என்றால், இது போன்ற ஆய்வுக் கூட்டங்கள் அவசியம்.

**பெரியார் - அண்ணா - கலைஞர் பேராசிரியரின் மறு உருவங்கள்!**

அதை முடித்துக்கொண்டு, `மாணிக்கம் மஹால்' திருமண மண்டபத்தில் நடைபெற்ற - கழக மூத்த முன்னோடிகளுக்கு, பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றோம். இந்தப் பொற்கிழி நிகழ்ச்சி என் அடையாளங்களில் ஒன்றாகவே மாறிவிட்டது. நம் கழக முன்னோடிகள் என்னைப் பார்த்ததும் கைகளைப் பிடித்துக்கொண்டு தங்களின் கழகப் பணிகள் அத்தனையையும் என்னிடம் சொல்லிவிடவேண்டும் என்ற தவிப்பு, அவர்களிடம் தெரியும். அப்படி அன்று தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்டக் கழகங்களின் சார்பில், மொத்தம் 1,000 கழக முன்னோடிகளுக்குத் தலா ரூ.10 ஆயிரம் வழங்கி வாழ்த்துப் பெற்றோம்.

"இந்தக் கழகத்தின் அச்சாணியே நீங்கள்தான். பெரியார் - அண்ணா - கலைஞர் - பேராசிரியர் ஆகியோரின் மறு உருவாகத்தான் உங்களைப் பார்க்கிறேன். உங்களுக்குப் பொற்கிழி வழங்குவது என்பது எங்கள் கடமை" என்று அவர்களின் மீதான என் அன்பை உரையாகப் பேசி முடித்தேன்.

அடுத்து தூத்துக்குடியில் புதுக்கோட்டைப் பகுதியில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம். பிரம்மாண்டமான ஏற்பாடு. கூட்டம் நடந்த இடத்தின் வாசலில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வரவேற்றனர். "கடந்த மாதம் 20-ஆம் தேதி மதுரையில் அ.தி.மு.க. மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் அக்கட்சியின் கொள்கை குறித்தோ, தமிழ்நாட்டின் நலன் குறித்தோ ஏதாவது பேசப்பட்டதா? விவாதிக்கப்பட்டதா? ஒரு மாநாடு எப்படி நடத்தக்கூடாது என்பதற்கான உதாரணம்தான் அந்த மாநாடு. ஆனால், நூற்றாண்டு வரலாறு கொண்ட ஒரு இயக்கத்தின் இளைஞர் அணி நடத்தக்கூடிய நம் மாநாடு, ஒரு மாநாடு எப்படி இருக்க வேண்டும், எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருக்க வேண்டும். அதற்கு உங்களின் வருகையை உறுதி செய்வது அவசியம்" என்று உரையாற்றி அவர்களை மாநாட்டுக்கு அழைத்தேன்.

> **காற்றில் கம்பு சுற்றும் பா.ஜ.க. தலைவர்கள்!**
>
> **"கடந்த 9 ஆண்டுகளாக வாயிலேயே வடை சுட்டுக்கொண்டிருக்கிறீர்களே. எங்களின் நலனுக்காகச் செய்த திட்டங்கள் என்ன?" என்று ஒட்டுமொத்த இந்தியாவும் ஓரணியில் திரண்டு நின்று, நிராயுதபாணியாக நிற்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ள நிலையில், த.மு.எ.க.ச மாநாட்டில் நான் பேசிய பேச்சை, 'இனப்படுகொலை செய்யத் தூண்டினேன்' என்று திரித்து அதையே மக்களிடம் இருந்து தங்களைக் காத்துக்கொள்ளும் ஆயுதமாக நினைத்து காற்றில் கம்பு சுற்றிக்கொண்டு இருக்கின்றனர் பா.ஜ.க. தலைவர்கள்.**



**அமைச்சர்கள் கீதாஜீவன் - அனிதா ராதாகிருஷ்ணனுக்கு எனது நன்றி!**

தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்ததுடன் மாநாட்டுக்கு நிதியும் வழங்கிய அமைச்சர்கள் அக்கா கீதா ஜீவன், அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் இருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகுவுக்கும், நிதியளித்த மாவட்ட இளைஞர் அணியினருக்கும் என் அன்பும் வாழ்த்தும்.

மறுநாள், தென்காசி மாவட்ட நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைத்துச் செல்ல அமைச்சர்கள் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களும் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களும் தூத்துக்குடி வந்திருந்தனர். இரவு 10.30 மணி ஆனபோதும் ஆலங்குளத்தில் ஆயிரக்கணக்கானோருடன் காத்திருந்து, என்னை வரவேற்ற தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் அண்ணன் ஜெயபாலன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த நாள் 5-ஆம் தேதி காலை தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டோம். நோயாளிகளைக் கனிவுடன் நடத்தி, அவர்களுக்கு விரைந்து சிகிச்சை அளிப்பதையும், மருத்துவமனையைச் சுகாதாரமாகப் பராமரிப்பதையும் உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தினோம்.

அதைத்தொடர்ந்து பல்வேறுதுறைகளின் சார்பில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினோம். அதன்பிறகு ஆய்வுக் கூட்டத்தை நடத்தினோம். கூட்டத்தின் நிறைவாக, "முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்தத் திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பலன்கள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களைச் சென்று சேரும் வகையில் உழைத்து, இந்த அரசுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக இருந்து, அரசுக்கு நற்பெயரை பெற்றுத்தரவேண்டும்" என்று அரசு அலுவலர்களைக் கேட்டுக்கொண்டேன்.

**தென்காசி தெற்கு மாவட்டம் சார்பில் முன்னோடிகளுக்குப் பொற்கிழி!**

அதைத்தொடர்ந்து, சிவந்தி நகரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தென்காசி தெற்கு மாவட்டக் கழகத்துக்கான அலுவலக வாசலில் அமைக்கப்பட்டுள்ள கழகக் கொடியை ஏற்றிவைத்து மகிழ்ந்தேன். மதிய உணவுக்குப் பிறகு, தென்காசி, `இசக்கி மஹால்' வளாகத்தில் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி. தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகங்களில் உள்ள முன்னோடிகளில் ஆயிரத்து 500 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் பொற்கிழியாக வழங்கி மகிழ்ந்தோம். இதுவரை தமிழ்நாடு முழுவதும் கழக முன்னோடிகளுக்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் 40 கோடி ரூபாய்க்கும் மேல் பொற்கிழியாக வழங்கப்பட்டுள்ளதைத் தெரிவித்து, இளைஞர் அணி அறக்கட்டளை சார்பிலும் உதவக் காத்திருக்கிறோம். கோரிக்கைகளை அன்பகத்துக்கு அனுப்பலாம் என்பதையும் சொல்லி விடைபெற்றோம்.

அடுத்து இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம். திரும்பிய திசையெங்கும் எழுச்சி என்று சொல்லும் அளவுக்குக் கட்டுக்கடங்காத இளைஞர்கள் கூட்டம். "9 ஆண்டுகளாக நாங்கள் இதெல்லாம் சாதனைகளைச் செய்துள்ளோம் என்று சொல்வதற்குக்கூட எதுவும் செய்யாத ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு, சனாதன ஒழிப்பு மாநாட்டில் நான் பேசியதைத் திரித்து அரசியல் செய்கிறது. 28 எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணிக்குப் பயந்து நாட்டின் பெயரையே 'பாரத்' என்று மாற்றி, தான் செய்த ஊழலையும், மணிப்பூரில் செய்த இனக்கலவரத்தையும் மறைக்க முயலும் ஒன்றிய பா.ஜ.க.வையும், மோடியையும் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஓடஓட விரட்ட வேண்டும். அதற்கான முதல் படியாக நம் இளைஞர் அணி மாநில மாநாடு அமையவேண்டும். அதற்கு, உங்கள் ஒவ்வொருவரின் வருகையும் அவசியம்" என்பதை எடுத்துரைத்து உரையாற்றினேன்.

> **மதங்களைப் பற்றி அண்ணா அவர்கள் கூறியது இன்றும் பொருத்தமாக இருப்பதால் அதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "எப்போது ஒரு மதம் மக்களை சமத்துவத்தை நோக்கி வழி நடத்துகிறதோ, அவர்களுக்கு சகோதரத்துவத்தைக் கற்பிக்கிறதோ, அப்போது நானும் ஆன்மீகவாதிதான். எப்போது ஒரு மதம் சாதியின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்துகிறதோ, அவர்களுக்குத் தீண்டாமையையும் அடிமைத்தனத்தையும் கற்பிக்கிறதோ, அப்போது அந்த மதத்தை எதிர்த்து நிற்கும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்" என்றார் அண்ணா.**

**தென்காசி பொறுப்பு அமைச்சர் - அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரனுக்கு நன்றி!**

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட பொறுப்பு அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களுக்கும் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்த மாவட்டச் செயலாளர் சகோதரர் ராஜா, மாவட்டப் பொறுப்பாளர் அண்ணன் ஜெயபாலன் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

## சாமியார் மீது வழக்குப்போடுவது - உருவப்பொம்மை எரிப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டு நேரத்தை வீணடிக்காதீர்!

இளைஞர் அணி துணைச் செயலாளர் சகோதரர் ஜி.பி.ராஜா, கூட்டத்துக்கு இளைஞர்களைத் திரட்டி, நிதி வழங்கிய மாவட்ட அமைப்பாளர்களுக்கு என் அன்பும் வாழ்த்தும். மாவட்ட ஆய்வுப் பணிகளை ஒருங்கிணைத்த சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றி.

தூத்துக்குடி, தென்காசியையும் சேர்த்து, இதுவரை 23 மாவட்டக் கழகங்களுக்கான இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி முடித்துள்ளோம். தென்காசியில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு மதுரைக்கு வந்து, விமானம் மூலம் நள்ளிரவில் சென்னை வந்து சேர்ந்தோம்.

**புத்தகங்கள் - இளைஞர் அணி வளர்ச்சி நிதி தாரீர்!**

அடுத்தடுத்த சுற்றுப்பயணம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளிவரும். இந்த நேரத்தில் கழகத்தினருக்கும், இளைஞர் அணி நிர்வாகிகளுக்கும் ஒரு வேண்டுகோள். கழக நிகழ்ச்சிகளில் பட்டாசு வெடிப்பது, ஃப்ளெக்ஸ் பேனர் வைப்பது, சால்வை - பொன்னாடை அணிவிப்பதை அறவே தவிர்க்கவும். இவற்றுக்குப் பதிலாக புத்தகங்களையோ, கழகத்தின் கருப்பு - சிவப்பு கரை வேட்டிகளையோ, இளைஞர் அணி வளர்ச்சி நிதியோ தாருங்கள். அவை மற்றவர்களுக்குப் பயன்படும்.

இந்த நேரத்தில் சில விஷயங்களை நம் கழகத்தினருக்குத் தெளிவுபடுத்த வேண்டியது என் கடமை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் - கலைஞர்கள் சங்கம்' கடந்த 2-ஆம் தேதி ஏற்பாடு செய்திருந்த 'சனாதன ஒழிப்பு' மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினேன்.

**காற்றில் கம்பு சுற்றும் பா.ஜ.க. தலைவர்கள்!**

"கடந்த 9 ஆண்டுகளாக வாயிலேயே வடை சுட்டுக்கொண்டிருக்கிறீர்களே. எங்களின் நலனுக்காகச் செய்த திட்டங்கள் என்ன?" என்று ஒட்டுமொத்த இந்தியாவும் ஓரணியில் திரண்டு நின்று, நிராயுதபாணியாக நிற்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ள நிலையில், த.மு.எ.க.ச மாநாட்டில் நான் பேசிய பேச்சை, 'இனப்படுகொலை செய்யத் தூண்டினேன்' என்று திரித்து அதையே மக்களிடம் இருந்து தங்களைக் காத்துக்கொள்ளும் ஆயுதமாக நினைத்து காற்றில் கம்பு சுற்றிக்கொண்டு இருக்கின்றனர் பா.ஜ.க. தலைவர்கள்.

இதில் ஆச்சர்யம் என்னவென்றால், அமித்ஷா போன்ற ஒன்றிய அரசின் அமைச்சர்கள், பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள் என யார் யாரோ இந்த அவதூறை மையமாக வைத்து, என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர்.

நியாயமாகப் பார்த்தால், மதிப்புக்குரிய பொறுப்பில் இருந்துகொண்டு அவதூறு பரப்பும் இவர்கள் மீது நான்தான் கிரிமினல் வழக்கு, நீதிமன்ற வழக்குகளைத் தொடுக்க வேண்டும். ஆனால், இவர்களுக்குப் பிழைப்பே இதுதான், இதைவிட்டால், பிழைப்பதற்கு அவர்களுக்கு வேறு வழி தெரியாது என்பதால், 'பிழைத்துப் போகட்டும்' என்று விட்டுவிட்டேன்.

தந்தை பெரியாரிடம் இருந்து வந்த பேரறிஞர் அண்ணாவால் நிறுவப்பட்ட தி.மு.கழகத்தின் இரண்டு கோடி தொண்டர்களில் நானும் ஒருவன். நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரி இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

**மதங்களைப் பற்றி அண்ணா அவர்கள் கூறியது இன்றும் பொருத்தமாக இருப்பதால் அதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "எப்போது ஒரு மதம் மக்களை சமத்துவத்தை நோக்கி வழிநடத்துகிறதோ, அவர்களுக்கு சகோதரத்துவத்தைக் கற்பிக்கிறதோ, அப்போது நானும் ஆன்மீகவாதிதான். எப்போது ஒரு மதம் சாதியின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்துகிறதோ, அவர்களுக்குத் தீண்டாமையையும் அடிமைத்தனத்தையும் கற்பிக்கிறதோ, அப்போது அந்த மதத்தை எதிர்த்து நிற்கும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்" என்றார் அண்ணா.**

**கடந்த 9 ஆண்டுகளாக சும்மாவே இருக்கும் பிரதமர்!**

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதை கற்பிக்கும் மதங்கள் அனைத்தையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால், இவை எதையும் புரிந்துகொள்ள விரும்பாமல், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெறும் அவதூறை மட்டுமே நம்பி களமிறங்கியுள்ள மோடி அண்ட் கோவை பார்க்கும்போது ஒரு பக்கம் பரிதாபமாகவும் இருக்கிறது. 'சும்மா இருக்கிறதுன்னா சும்மாவா?' என, திரைப்பட நடிகர் அண்ணன் வடிவேலு அவர்கள் ஏற்று நடித்த கதாபாத்திரம் போட்டி போடும் அளவுக்கு மோடி அவர்கள் கடந்த 9 ஆண்டுகளாக சும்மாவே இருந்துள்ளார்.

இடையிடையே பணத்தை மதிப்பிழக்கச் செய்வது, குடிசைகளை மறைத்து சுவர் எழுப்புவது, புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்டுவது, அங்கு செங்கோல் நடுவது, நாட்டின் பெயரை மாற்றி விளையாடுவது, எல்லையில் நின்றபடி வெள்ளைக் கொடிக்கு வேலை வைப்பது... என, வடிவேலு அண்ணனின் `23-ஆம் புலிகேசி' கதாபாத்திரத்தோடு போட்டிபோட்டு நகைச்சுவை செய்துகொண்டுள்ளார்.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

# தி.மு.கழகம் மீது களங்கம்: முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

## சனாதனம் என்ற சொல்லை வைத்து பெண் இனத்தையே அடிமைப்படுத்த நினைக்கிறார்கள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

அமைச்சரின் தலைக்கு விலை வைத்து ஒருவர் அறிவிக்கிறார் என்றால், அவர் மீது உத்தரப்பிரதேச மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா? வழக்குப் போட்டதா? மாறாக, உதயநிதி மேல் வழக்குப் போட்டுள்ளார்கள்.

இந்த நிலையில், 'சனாதனத்தைப் பற்றி தவறாகப் பேசினால் உரிய பதிலடி கொடுக்க வேண்டும்' என்று ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பேசியதாக தேசிய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு செய்தி வந்தால், அது உண்மையா பொய்யா என்பதை அறிந்துகொள்ளும் அனைத்து வசதிகளும் நாட்டின் பிரதமருக்கு உண்டு.

**பிரதமர் மோடி அறிந்து பேசுகிறாரா? அறியாமல் பேசுகிறாரா?**

அப்படி இருக்கையில், அமைச்சர் உதயநிதி அவர்கள் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகப் பரப்பியது குறித்து, பிரதமர் அவர்கள் அறியாமல் பேசுகிறாரா? அல்லது அறிந்தேதான் பேசுகிறாரா?

ஏற்கனவே கடந்த சில வாரங்களுக்கு முன்பு, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பேசிய வீடியோ ஒன்றின் உண்மைத்தன்மையை அறியாமல் நாடாளுமன்றத்திலேயே பேசியிருந்தார் பிரதமர் அவர்கள்.

இதையெல்லாம் பார்த்தால், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாத பிரதமர் அவர்கள், இப்போது, மக்களைத் திசைதிருப்பி சனாதனப் போர்வையைப் போர்த்திக்கொண்டு குளிர்காய நினைப்பதாகவே தெரிகிறது.

மணிப்பூர் பற்றியோ சி.ஏ.ஜி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 7.50 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முறைகேடுகள் பற்றியோ பிரதமரும் ஒன்றிய அமைச்சர்களும் இன்னும் வாயே திறக்கவில்லை.

ஆனால் சனாதனத்தைப் பற்றிப் பேசியவுடன், ஒன்றிய அமைச்சரவையே கூடி இருக்கிறது என்றால், இவர்கள்தான் பிற்படுத்தபட்ட - பட்டியலின - பழங்குடியின மக்களைக் காப்பாற்றப் போகிறார்களா? பெண்ணினத்தை முன்னேற்றப் போகிறார்களா?

**தீண்டாமையை ஆதரிக்கும் சனாதனத்தை ஏற்க முடியுமா?**

அதனால்தான் நேற்று அண்ணல் அம்பேத்கரின் பேரன் திரு. பிரகாஷ் அம்பேத்கர் கூட, "தீண்டாமையை ஆதரிக்கும் சனாதனத்தை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு பிரதமர் பதில் என்ன?

பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள் அனைத்தும் சேர்ந்து உருவாக்கியுள்ள 'இந்தியா' கூட்டணியானது, பிரதமரை நிலைதடுமாற வைத்துவிட்டது. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என ஏதோ பூச்சாண்டி காட்டி வருகிறார்.

> திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அதனுடைய கொள்கை கோட்பாடுகள் என்பவை வெளிப்படையானவை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றும் இயங்கும் இயக்கம். பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின பழங்குடி மக்களுக்கும்; சிறுபான்மைச் சமூகத்துக்கும்; பெண்ணினத்துக்கும்; ஏழை எளிய மக்களுக்கும் 'எல்லாம்' கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களது உயர்வுக்காக குரல் கொடுத்து வரும் இயக்கம். அதனால்தான் ஆறாவது முறையாக ஆட்சியைக் கொடுத்து அலங்கரித்துள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

நாடாளுமன்றத் தேர்தலைப் பார்த்து பயந்திருப்பது பா.ஜ.க. தானே தவிர, 'இந்தியா' கூட்டணி அல்ல.

பா.ஜ.க.வுக்கு இப்போது வந்திருப்பது, சனாதனத்தின் மீதான ஈடுபாடு அல்ல. இந்தியா கூட்டணிக்குள் எப்படியாவது விரிசலை ஏற்படுத்திவிட முடியாதா என்ற அரசியல் கணக்கு. இதைப் புரிந்து கொள்ள பெரிய அரசியல் வித்தகம் எதுவும் தேவையில்லை.

**மோகன் பாகவத் பேச்சே பா.ஜ.க.வினருக்கு விளக்கம்!**

மேலும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பாகவத் அவர்களே, "சமூக அமைப்பில் சக மனிதர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டோம். நாம் அவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. மேலும் அது 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்தது. நாம் அவர்களுக்கு சமத்துவத்தை வழங்கும் வரை, இடஒதுக்கீடு உள்ளிட்ட சிறப்புத் தீர்வுகள் இருக்க வேண்டும்" என்று பேசியிருக்கிறார். எனவே, இதற்கு மேலும் உதயநிதி பேசியது தொடர்பாக பா.ஜ.க. வினருக்கு விளக்கம் வேண்டும் என்றால், மோகன் பாகவத் அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும்.

அரசியலுக்காக மத உணர்வைக் கிளறி ஆதாயம் தேடும் அற்ப அரசியலை, பழுத்த அனுபவமும் நாட்டின் மீது மாறாப் பற்றும் கொண்ட தலைவர்கள் புறந்தள்ளி, பா.ஜ.க. விடமிருந்து நாட்டைக் காக்கும் கடமையை மேலும் வேகப்படுத்துவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய கொள்கை கோட்பாடுகள் என்பவை வெளிப்படையானவை.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றும் இயங்கும் இயக்கம். பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின பழங்குடி மக்களுக்கும்; சிறுபான்மைச் சமூகத்துக்கும்; பெண்ணினத்துக்கும்; ஏழை எளிய மக்களுக்கும் 'எல்லாம்' கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களது உயர்வுக்காக குரல் கொடுத்து வரும் இயக்கம். அதனால்தான் ஆறாவது முறையாக ஆட்சியைக் கொடுத்து அலங்கரித்துள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

**சுயமரியாதையுள்ள மனிதனாக ஆக்கி வருவது தி.மு.கழகம்!**

அதனால்தான், அனைத்து இந்துக்களும் அர்ச்சகர் ஆக முடியும் என்பதை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். இந்தியாவிலேயே முதலில் பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை கொடுத்து, சனாதனம் மறுத்ததை சாத்தியம் ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழகம்.

எந்தத் தனிமனிதர் உணர்வுக்கும் மதிப்பளித்து அவர்களை சுயமரியாதை உள்ள மனிதர்களாக ஆக்கி வரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

இனம், மொழி, சாதி வேறுபாடு இன்றி அனைவரும் ஒருதாய் மக்களாக வாழும் அமைதிமிகு வாழ்க்கையை உறுதிசெய்து வரும் இயக்கம். கொள்கையை அறிவுப்பிரச்சாரம் செய்தவர்களே தவிர, எந்தக் காலத்திலும் வன்முறையில் நம்பிக்கை இல்லாத இயக்கம். அத்தகைய பழம்பெரும் பேரியக்கத்தின் மீது களங்கம் கற்பிப்பதன் மூலமாக அரசியல் செய்ய நினைத்தால் அந்தப் புதை குழியில், பா.ஜ.க.தான் மூழ்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

# பாலங்கள் - சாலைகள் : முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் சாலையை இரண்டு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தப்பட்ட சாலை ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் ஏற்கனவே வலுவிழந்த நிலையில் இருந்த 5.50 மீட்டர் அகலம் கொண்ட குறுகிய பாலம், தற்போது அகலப்படுத்தப்பட்டு மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியைச் சுற்றிலும் சி.பி.சி.எல் (CPCL), ஐ.ஓ.சி.எல் (IOCL), எம்.எஃப்.எல் (MFL) போன்ற தொழிற்சாலைகள் இயக்குவதால் இச்சாலையில் கனரக வாகனங்கள் பெருமளவில் இயக்கப்படுகின்றன. இப்புதிய பாலத்தால் இப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் குறையும். திருவொற்றியூரிலிருந்து மணலி, மாதவரம், மீஞ்சூர் மற்றும் கோயம்பேடு செல்லும் வாகனங்கள் எளிதாக செல்ல முடியும். மணலியிலிருந்து தண்டையார் பேட்டை, கொருக்குப்பேட்டை, இராயபுரம் மற்றும் சென்னை செல்லும் வாகனங்களும் எளிதாக செல்ல முடியும்.

**பல்லடம் - தாராபுரம் சாலை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக மாற்றியமைக்கும் பணி**

திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாராபுரம் சாலை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக 53 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட சாலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இத்திட்டத்தில் 8 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியுடன், குறுக்கு வடிகால் கட்டுதல், பேருந்து நிறுத்தம் அமைத்தல், மழை நீர் வடிகால் அமைத்தல் மற்றும் சாலை மையத்திட்டு அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்கள், கோழிப் பண்ணைகள், தேனீ வளர்ப்பு மற்றும் உற்பத்தித் தொழில்கள் ஆகியவை அருகாமையில் அமைந்துள்ள இச்சாலையானது, திருப்பூர் மாவட்டத்தில் போக்குவரத்து செறிவு அதிகம் உள்ள சாலைகளில் ஒன்றாகும். பல்லடம் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள நகரப்பகுதி மற்றும் சிற்றூர்களில் வசிக்கும் மக்களின் உயிர்நாடியாக இச்சாலை விளங்குவதால், இதன் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் காய்கறிகள் மற்றும் பணப்பயிர்களை பயிரிட்டு, பருவகாலங்களில் அருகிலுள்ள சந்தைப்படுத்தும் இடங்களுக்கு இச்சாலை வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த சாலையானது கோவை, ஊட்டி, கொடைக்கானல் போன்ற பல்வேறு சுற்றுலா தலங்களுக்கும், பழனி போன்ற புனிதத் தலங்களுக்கும் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் இணைப்பை மேலும் மேம்படுத்துகிறது.

**கோயம்புத்தூர் நகரில், கவுண்டம்பாளையத்தில் மேம்பாலம் அமைக்கும் பணி**

கோயம்புத்தூர் நகரில், தேசிய நெடுஞ்சாலை எண்.67ல் (நாகப்பட்டினம் கூடலூர் - மைசூர் சாலை) கோயம்புத்தூர்மேட்டுப்பாளையம் சாலை மற்றும் கணபதி மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பில் 658 மீட்டர் நீளத்திற்கு 41 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்பாலத்தினால் ஜி.என் மில்ஸ் சந்திப்பு மற்றும் 4 இதர சந்திப்புகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் குறையும். மேலும், துடியலூரிலிருந்து சாய்பாபா காலனி, ரயில் நிலையம், மணிக்கூண்டு, அரசு மருத்துவமனை, காந்திபுரம், உக்கடம், பொள்ளாச்சி மற்றும் பழனி செல்லும் வாகனங்கள் எளிதாக செல்ல முடியும். ஜி.என் மில்ஸ் பாலத்தின் தள அளவில் காசிநஞ்சகவுண்டன்புதூர், கணபதி, உருமாண்டம்பாளையம், சின்ன வேடம்பட்டி, மணியக்காரன்பாளையம் மற்றும் சரவணம்பட்டி செல்லும் வாகனங்கள் எளிதாக செல்ல முடியும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் மரு. எஸ். பிரபாகர், நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு தலைமைப் பொறியாளர் இரா. சந்திரசேகர், தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் திருமதி ஆர். கீதா, சென்னைகன்னியாகுமரி தொழிற்தட திட்ட தலைமை பொறியாளர் எம்.கே. செல்வன், மாநகர தலைமை பொறியாளர் டி.இளங்கோ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


# களமாடும் கரிகாற் சோழன்- நம் உதயநிதி!

இளந்தலைவ ரானஎஃகு நெஞ்சினன் - எந்த
இடருக்கும் இடர்செய்து விஞ்சுவான்
களமாடும் எங்கள் கரிகாலச் - சோழனுக்கு
கயமையன் எவனடா விலைவைப்பது?
உளம்கொதித் தெழுந்தமிழ் உன்னதன் - தாய்மண்
உணர்வொன்றே உயிரெனும் உதயநிதி
வளம்கொழி இதயநிதி வர்ணாசிரம - சனாதனம்
மாற்றுவான்ஆ! சாமிஉன் தலைகாத்திடு!

சாதிமத பேதங்கள் ஒன்றிய - இந்தியா
தான்வேண்டும் என்பதே சனாதனமெனில்
மாதிறத்துத் தாய்க்குலத்தை அடிமைசெய் - சனாதனம்
மாற்றிடோம் எனவம்புவ ழக்காடலெனில்
ஆதிநாள்தொடர் மூடத்தனமே சனாதனம் - என்பீரேல்
அக்காட்டு மிராண்டிக் கெடுகொள்கைகள்
ஓதியேஒழிதலை, ஒழிப்போம் ஒழிப்போமென - உதயநிதி
ஓராயிரம், கோடிகோடி ஒழிப்போம் முழக்கமே!

காவிஉடை மறைந்த கபடவேட - ஓ!சாமி
கடவுள்உள பஃதிளது மடமைவளர்ப்பதா?
தாவிக் குதிக்கிறார் சாதிமதபேதம் தலைக்கேறி
ததாதன சொல்உம்நாவு அழுகாதா?
கோவிலுக்குள் புகுந்தவஞ்சக் கோட்டான்களே - அழிவுசெய்
கொடுமைகள் பக்திபேரால் செய்யலாமா
மாவினைசெய் ஆட்சியரே மமதைஏன் - சனாதனம்வெல்
மாந்தநேய உதயநிதி மாண்பறிவீரே!

மனத்துக்கண் மாசிலனாதலே - அனைத்தறன்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென
இனத்தமிழ்நெறி திராவிடச் சமநெறி - அய்யன்குறள்
இவ்வுலகம் பொதுநெறியை இந்தியா
தனதுதேசிய நெறியாக ஏற்கட்டும் - சனாதனம்
தகுமாற்றம் காணட்டும் உதயநிதி
கனிஅமுதச் சமநீதி களம்காண்கொள்கை - வெல்லட்டும்
காலமெலாம் ஞாலம்நன்று வாழட்டும்.



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**

## கலைஞர் நூற்றாண்டு விழா: தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் கருத்தரங்கம்!

# மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## நலக்குழுவின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*சென்னை, செப். 8 -*

*தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கருத்தரங்கம் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் குறித்து அக்குழுவின் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.*

*தி.மு.கழக ஆதிதிராவிடர் நலக்குழு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டம் மாநில முழுவதும் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நடத்தப்பட உள்ளது. இதில் முதலாவதாக கீழ்காணும் மாவட்டங்களில் நடைபெற உள்ளது.*

*இதில் ஆதிதிராவிடர் நலக்குழு பொறுப்பாளர்கள் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்கயல்விழி செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றவிருக்கின்றனர்.*

*இன்று (08.09.2023) மாலை 3.00 மணிக்கு - இடம்: மாவட்ட கழக அலுவலகம் தில்லை நகர் திருச்சி, நிகழ்ச்சி: திருச்சி மண்டல, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம். சிறப்புரை ஆற்றுபவர்கள்: ஆ. கிருஷ்ணசாமி, பி.துரைசாமி*

*நாளை (09.09.2023) காலை: 9.00 மணிக்கு, இடம்: துவாரகா பேலஸ், மதுரை. நிகழ்ச்சி: கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் தலைப்பு: காலத்தை வென்றவர் கலைஞர். சிறப்புரை ஆற்றுபவர்கள்: பீட்டர் அல்போன்ஸ், நாஞ்சில் சம்பத், மு.தென்னவன்*

*24.09.2023 காலை 9.00 மணிக்கு, இடம்: பூந்தமல்லி, நிகழ்ச்சி: சென்னை மண்டல, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம். சிறப்புரை ஆற்றுபவர்கள்: ஆ. கிருஷ்ணசாமி, ச. தசரதன்*

*26.09.2023 காலை 9 மணிக்கு, இடம்: கலைஞர் அறிவாலயம், விழுப்புரம். நிகழ்ச்சி: கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம். சிறப்புரை ஆற்றுபவர்: திண்டுக்கல். ஐ. லியோனி*

*இதில், அனைத்து மாவட்ட, மாநகர, கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூக நீதிமற்றும் மதசார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள், உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப் படங்களாக கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து*

*இவ்வாறு -ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.*



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மூக்கையா தேவர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அரசரடியில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், வைகை பரமன், முத்து கணேஷ், இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாம் பிறருக்கு நாகரிகம் கற்றுத் தருபவர்கள்! சாமியார் உருவ பொம்மைகள் எரிப்பதை தவிர்த்திடுவீர்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம்!... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

திரையில் வடிவேலு அண்ணனை ரசிக்க முடிந்தது. நிஜத்தில் இவர்களை... மக்களின் வாக்குகளைப் பெற எந்தஅளவுக்கும் சென்று, இவர்கள் நாடக அரசியலைச் செய்வார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது.

நான் இதை நகைச்சுவைக்காக மட்டும் சொல்லவில்லை, ஏழை, எளிய மக்களின் வாழ்வை உயர்த்தும் 'புதுமைப்பெண்' திட்டம் போன்றோ, முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டி திட்டம் போன்றோ, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் போன்றோ ஏதாவது ஒரு முற்போக்குத் திட்டம் கடந்த 9 ஆண்டு கால ஒன்றிய அரசிடம் இருந்து வந்திருக்கிறதா? மதுரை எய்ம்ஸை கட்டினார்களா? கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைப் போன்று ஏதாவது அறிவியக்கத்தை முன்னெடுத்தார்களா?

**ஆட்டுத் தாடிக்குப் பின்னால் நீண்ட நாள் ஒளிந்திருக்க முடியாது!**

'சனாதனம் என்றால் என்ன' என்பதை வீட்டினுள் பத்திரமாக அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களில் இருந்து தேடிக்கொண்டிருக்கும் எடப்பாடி அவர்களே, கொடநாடு கொலை - கொள்ளை வழக்குகளிலும், ஊழல் வழக்குகளில் இருந்தும் தப்பிக்க, நீங்கள் ஆட்டுத் தாடிக்குப்பின் நீண்டநாள் ஒளிந்திருக்க முடியாது. ஆடு ஒருநாள் காணாமல் போகும்போது, நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

'என்ன வாய் மட்டும் வேலை செய்யுது' என்பது போல, மீடியாவைச் சந்திப்பது மட்டுமே மக்கள் பணி என நினைக்கும் சிலர், நான் பேசாததைப் பேசியதாகத் திரிக்கும் அவதூறுகளை வைத்து, வாயை வாடகைக்கு விட்டுப் பிழைப்பு நடத்தி வருகின்றனர். அவர்களின் பிழைப்பில் நான் மண் அள்ளிப்போட விரும்ப வில்லை, பிழைத்துப்போகட்டும்.

நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது கொரோனா காலத்தில் அரிசி, மளிகை, காய்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை நலத்திட்ட உதவியாக வழங்க வீடு வீடாக ஏறிக்கொண்டிருந்தோமே, அப்போது அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் என்ன செய்தன? மணி அடித்தபடியும், விளக்கு பிடித்தபடியும் கொரோனா கிருமியை ஒழிக்கப் போராடிக் கொண்டு இருந்தன.

இன்று நாம் ஆளுங்கட்சி. இன்றும் நாம் கலைஞரின் நூற்றாண்டை மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாட, நலத்திட்ட உதவிகளை வழங்க வீடு வீடாக ஏறி இறங்கிக்கொண்டு இருக்கிறோம். அ.தி.மு.க.வோ ஆடலும் பாடலும் பின்னணி யில், புளி சாத மாநாடுகளை நடத்திக்கொண்டு, விழுவதற்குக் கால்கள் கிடைக்காதா, ஊர்ந்து போக ஏதாவது ஃபர்னிச்சர் கிடைக்காதா எனத் தேடிக் கொண்டிருக்கிறது.

**மணிப்பூர் பற்றிய கேள்விக்குப் பயந்து ஊர் ஊராகச் சுற்றும் பிரதமர்!**

ஒன்றிய பிரதமர் மோடியோ, கொரோனா நிதியாகத் திரட்டிய 'பி.எம். கேர்ஸ்'க்கு கணக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றபடி, 7.5 லட்சம் கோடி ரூபாய் என்ன ஆனது என்ற சி.ஏ.ஜி. கேள்விக்குப் பதிலளிக்காமல், ஊரில் இருந்தால், மணிப்பூர் பற்றிக் கேள்வி கேட்பார்களே என்று பயந்து நண்பர் அதானியை அழைத்துக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு இருக்கிறார். உண்மையைச் சொல்வது என்றால், மக்களின் அறியாமைதான் இவர்களின் நாடக அரசியலுக்கான மூலதனம்.

மணிப்பூர் கலவரத்தைத் தூண்டிவிட்டு 250க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்படக் காரணமாக இருந்தது, 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல்... போன்றவற்றைத் திசை திருப்பத்தான் 'மோடி அண்ட் கோ' இப்படி சனாதன கம்பைச் சுற்றிக் கொண்டு இருக்கிறது. இவர்களின் கைகளில் தான் மொத்தமாகச் சிக்கியுள்ளதால், 'ஒரே நாடு ஒரே தேர்தலா... நடத்திடுவோம் எஜமான்', 'பாரதம்னு மாத்துறீங்களா... மாத்திடுங்க ஓனர்' என்று மோடியின் நாடகத்தையே இங்கே அரங்கேற்றிக்கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்.

> **கடந்த 9 ஆண்டுகளாக சும்மாவே இருக்கும் பிரதமர்!**
>
> `பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதை கற்பிக்கும் மதங்கள் அனைத்தையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால், இவை எதையும் புரிந்துகொள்ள விரும்பாமல், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெறும் அவதூறை மட்டுமே நம்பி களமிறங்கியுள்ள மோடி அண்ட் கோவை பார்க்கும்போது ஒரு பக்கம் பரிதாபமாகவும் இருக்கிறது. 'சும்மா இருக்கிறதுன்னா சும்மாவா?' என, திரைப்பட நடிகர் அண்ணன் வடிவேலு அவர்கள் ஏற்று நடித்த கதாபாத்திரத்திடம் போட்டி போடும் அளவுக்கு மோடி அவர்கள் கடந்த 9 ஆண்டுகளாக சும்மாவே இருந்துள்ளார்.

**முற்றும் துறந்த முனிவரிடம் 10 கோடி எப்படி வந்தது?**

சாமியார்களுக்குத்தான் இந்தக் காலத்தில் அதிக விளம்பரம் தேவைப்படுகிறது. அப்படி ஒரு சாமியார் இடையில் புகுந்து என் தலைக்கு 10 கோடி ரூபாய் விலை வைத்துள்ளார். என் தலையைவிட 'முற்றும் துறந்தவரிடம் எப்படி 10 கோடி' என்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. தவிர பலர் என் மீது நாட்டின் பல்வேறு காவல் நிலையங்களிலும், மாண்பமை நீதிமன்றங்களிலும் புகார் அளித்து வருவதாகத் தெரிகிறது.

இந்த நிலையில், 'கொலை மிரட்டல் விடுத்த அந்தச் சாமியாரை கைது செய்ய வேண்டும்' என்று கோரி நம் கழகத்தினர் தமிழ்நாட்டின் பல்வேறு காவல் நிலையங்களில் புகார் அளித்து வருவதாகவும், அந்தச் சாமியாரின் உருவ பொம்மையை எரிப்பது, அவரின் படத்தைக் கொளுத்துவது, கண்டனச் சுவரொட்டிகளை ஒட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் தெரிகிறது.

நாம் பிறருக்கு நாகரிகம் கற்றுத் தருபவர்கள். நம் தலைவர்கள் நம்மை அப்படித்தான் வளர்த்தெடுத்துள்ளனர். எனவே, அதுபோன்ற காரியங்களை நம் இயக்கத் தோழர்கள் அறவே தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தவிர, நமக்கு இயக்கப் பணி, மக்கள் பணி என எண்ணிலடங்காப் பணிகள் காத்திருக்கின்றன.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு அரசின் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் பல பணிகளை நம் முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்கான பணிகள், நாடாளுமன்றத் தேர்தல் பணிகள்... என ஏராளமான பணிகள் நமக்கு முன் உள்ளன.

**நேரத்தை வீணடிக்கும் பணிகளில் கழகத்தினர் எவரும் ஈடுபடாதீர்!**

இவ்வளவு வேலைகள் இருக்கும்போது சாமியாரின் மீது வழக்குப் போடுவது, உருவ பொம்மையை எரிப்பது.. போன்ற, நேரத்தை வீணடிக்கக்கூடிய பணிகளில் நம் கழகத்தினர் எவரும் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலும், தலைமைக் கழகத்தின் ஆலோசனையும் பெற்று சட்டத்துறையின் உதவியுடன் சட்டப்படி எதிர்கொள்வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஆதரவு தெரிவித்து கருத்துகளைப் பகிர்ந்த தோழமைக் கட்சியின் தலைவர்களுக்கும், மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 'சனாதன தர்மம்' எதை வலியுறுத்துகிறது, அதில் அப்படி என்னதான் சொல்லப்பட்டுள்ளது' என்பதை நாடு தழுவிய அளவில் ஒரு பேசுபொருளாக மாற்றக் காரணமாக அமைந்த 'சனாதன ஒழிப்பு மாநாட்டுக்கு'ம், அதை ஒருங்கிணைத்த த.மு.எ.க.ச தோழர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாநாட்டுக்கு நான் செல்லக் காரணமாக இருந்த அண்ணன் 'புதுகை பூபாளம்' பிரகதீஸ்வரன் அவர்களுக்கு என் அன்பு.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் புகழ் ஓங்கட்டும். தொடர்ந்து அவர்களின் கொள்கை வழியில் நடக்க உறுதியேற்போம்.

நன்றி, வணக்கம்.
உங்கள்,
உதயநிதி

இவ்வாறு அம்மடலில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

ரூ.1.54 கோடியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

# சேலத்தில் அரசுப் பொருட்காட்சி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தனர்!

*சேலம், செப். 8 -*

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் 06.09.2023 அன்று சேலம், புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சித் திடலில் சேலம் அரசுப் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து, 62 பயனாளிகளுக்கு ரூ.1.54 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் அரசின் திட்டங்களை கடைக்கோடிப் பகுதி மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சேலம் அரசுப் பொருட்காட்சியானது இன்றையதினம் முதல் 45 நாட்கள் நடைபெறும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சியை சிறப்பாக இங்கு நடத்த ஏற்பாடு செய்துள்ள தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு எண்ணற்ற பல்வேறு திட்டப்பணிகளை தொடர்ச்சியாக அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான இடம் ஒதுக்கப்பட்டு மற்ற ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று, இளைஞர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புகளை அளிக்கும் வகையில் கருப்பூரில் டைடல் மென்பொருள் தொழில் பூங்கா அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத் திட்டப் பணிகளை பொதுமக்கள் எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு அரசுத்துறைகளை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை விளக்கும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய அரசுப் பொருட்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இப்பொருட்காட்சியினைக் கண்டுகளித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இவ்விழாவில் கூட்டுறவுத் துறை, மகளிர் திட்டம், வேளாண்மை - உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என பல்வேறு துறைகளின் சார்பில் 62 பயனாளிகளுக்கு ரூ.1.54 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மாநகராட்சிக்கென 7 வாகனங்கள் ரூ.94 இலட்சம் மதிப்பீட்டிலும் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

இதனைப் பெறும் பயனாளிகள் தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு மென்மேலும் உயர எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

இவ்விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றைய தினம் சேலம் அரசுப் பொருட்காட்சியானது தொடங்கி வைக்கப்பட்டு, வருகின்ற 20.10.2023 வரை தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறவுள்ளன. இப்பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்துள்ள மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதல், பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முத்தாய்ப்பாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகளை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில், அரசின் திட்டங்களும், சாதனைகளும் சிறந்த முறையில் மக்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. கடந்த 2022 ஆண்டு நடைபெற்ற சேலம் அரசுப் பொருட்காட்சியினை 1,58,480 பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

இப்பொருட்காட்சியின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைப் பற்றி பொதுமக்கள் எளிதில் அறிந்து கொண்டு பயனடைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாநகர காவல் ஆணையர் திருமதி விஜயகுமாரி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு. அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் (நினைவகங்கள்) / கூடுதல் இயக்குநர் (செய்தி மு.கூ.பொ) கு. தமிழ்செல்வராஜன், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சூரமங்கலம் மண்டலக் குழுத் தலைவர் எஸ்.டி. கலையமுதன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை - கட்டடம் (க & ப ) வட்டம் திருச்சி-1.
கலைஞர் 100 1924 - 2023
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 14 க.பொ/க (க & ப) வட்டம். திருச்சி / 2023-2024 / நாள் :04.09.2023
சதவிகித முறை - ஒப்பந்த வகை : "சி" படிவம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப) வட்டம் திருச்சி–1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள மின் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு தொகை | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு | முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருச்சி மாவட்டம் இலால்குடி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல காப்பக (50 படுக்கைகள்) கட்டிடத்திற்கு உட்புற மற்றும் வெளிப்புற மின் பணிகள் செய்தல் | ரூ.77.35 இலட்சங்கள் | ரூ.48,700/- | 90 நாட்கள் | வகுப்பு-IVமற்றும் அதற்கு மேல் வகுப்பில் (ரூ.50 இலட்சம் மேல் ரூ.2.00 கோடி வரை மற்றும் அதற்கு மேல் பணவரம்பில் பதிவு பெற்றவர்களாகவும் ESB மற்றும் அதற்கு மேல் மின் உரிமம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். | செயற் பொறியாளர் ( மின்) பொபது., மின் கோட்டம் திருச்சி-1 (என்ற பெயரில்) (மின்னணு மூலம்) |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : **08.09.2023 முதல் 26.09.2023 மாலை 3.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : **26.09.2023 மாலை 3.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **27.09.2023 மாலை 4.00 மணி முதல்**

செ.ம.தொ.இ / 4941 / ஒப்பந்தப்புள்ளி /2023
கண்காணிப்புப் பொறியாளர் பொபது., (கூ/பொ), கட்டட (க & ப) வட்டம் திருச்சி-1.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்
கலைஞர் 100 1924 - 2023
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒ.அ.எண்:38/2023–24/தவஅ/ நாள்: 02.09.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் 2023–24ம் ஆண்டிற்கான திட்டம் சாரா பணிகளில், **திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **3 பணிக்கு இணையவழியில்** மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **27.09.2023, 14.00 மணி** வரை (இணையநேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **11.09.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4919/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி–20.


---

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



செஞ்சி கே.எஸ்.மஸ்தான்

*விழுப்புரம், செப். 8 -*

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் 12.9.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும்உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.தலைமைக் கழக அறிவிப்பின்படி செப்டம்பர் 17 அன்று வேலூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கழகத்தினர் பங்கேற்பது தொடர்பாக

2.டிசம்பர் 15ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் கழக இளைஞரணிமாநில மாநாட்டில் கழகத்தினர் பங்கேற்பது தொடர்பாக

3.கழக மூத்த முன்னோடி களை கண்டறிந்து அவர்களுக்கு பொற்கிழி வாங்குவதற்கான பட்டியலை தயார் செய்தல் தொடர்பாக

4.வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சிகளில் பாக முகவர்கள் (BLA2)கூட்டம் நடத்துவது தொடர்பாக.

5.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஒன்றிய, நகர ,பேரூர், கழகங்களில்இளைஞரணி சார்பில் இல்லம் தேடி சென்று அதிக அளவில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் தொடர்பாக.

6.கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாவட்ட தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம்!

### நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கை!

தி.மு.க. நெசவாளர் அணி மாவட்ட தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம் 12-9-2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, தியாகராயர் நகர், கோமதி நாராயணசாமி சாலையில் உள்ள "ஓட்டல் அகார்டு"வில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை எஸ்.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், ஈரோடு சிந்து ரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் கழக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி, கைத்தறி துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - சென்னை மேற்கு மாவட்டச்செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர் மற்றும் அமைப்பாளர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, 2. ஆக்கப் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 4.9.2023

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (6.9.2023) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



துறைமுக நகராம் தூத்துக்குடியின் புதுக்கோட்டை நல்லமலை பகுதியில், கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளர் எஸ்.ஜோயல் இல்லத்துக்கு அருகே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி, 100 அடி உயரக் கொடிக்கம்பத்தில், மாநில சுயாட்சியின் அடையாளமாக திகழும் கழகத்தின் இருவண்ணக் கொடியினை கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்தார்.

### சங்ககிரி வட்டம் – சாலை விபத்தில் இறந்த

# 6 பேர் குடும்பத்தாருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப்.8-

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னக்கவுண்டனூர் கிராமம் அருகே நேற்று முன்தினம் (6-9-2023) அதிகாலை சேலத்திலிருந்து பெருந்துறை நோக்கிச் சென்ற கார், சேலம்-கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சின்னாக் கவுண்டனூர் பைபாஸ் என்ற இடத்தில் நின்று கொண்டிருந்த லாரியின் மீது எதிர்பாராதவிதமாக பின்புறம் மோதி ஏற்பட்ட விபத்தில் காரில் பயணம் செய்த ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம், காவேரிபாளையத்தைச் சேர்ந்த செல்வராஜ், த/பெ. பச்சான் (வயது 55), ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர், குட்டப்பாளையத்தைச் சேர்ந்த பழனிசாமி (வயது 50), திருமதி.பாப்பாத்தி, க/பெ.பழனிசாமி (வயது 45), ஆறுமுகம், த/பெ.முத்தான் (வயது 45), திருமதி. மஞ்சுளா, க/பெ.ஆறுமுகம் (வயது 40), மற்றும் சேலம், கொண்டலாம்பட்டியைச் சேர்ந்த ராஜதுரை என்பவரின் ஒரு வயது பெண் குழந்தை சஞ்சனா ஆகிய ஆறு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் விக்னேஷ் மற்றும் திருமதி.பிரியா ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

### பல்கலைக் கழக துணை வேந்தர் தேர்வுக் குழு அமைப்பு!

# ஆளுநரின் அறிவிக்கை - மரபுகளுக்கும் விதிகளுக்கும் முரணானது!

## “ அரசு சட்டப்படி எதிர்கொள்ளும்!” - அமைச்சர் க.பொன்முடி அறிவிப்பு!

சென்னை, செப்.8-

பல்கலைக் கழக துணை வேந்தர்களுக்கான தேர்தல் குழுவை தமிழ்நாடு ஆளுநர் தன்னிச்சையாக அமைந்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார். அது மரபு மற்றும் விதிகளுக்கு முரணானது. அதை அரசு சட்டப்படி எதிர்கொள்ளும் என உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

அவரது அறிவிக்கை வருமாறு : -

தமிழ்நாட்டில் உயர் கல்வி துறையின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. இப்பல்கலைக் கழகங்களுக்கென தனித்தனியே சட்டம் மற்றும் விதிகள் உள்ளன. இவற்றின் படி துணை வேந்தரின் பதவிக்காலம் முடிந்தவுடன் அதனை நிரப்ப தேடுதல் குழு அமைக்கப்பட்டு அதன்மூலம் துணைவேந்தர் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார். உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் பல்கலைக் கழக சட்டவிதிகளில், ஆளுநர்,



துணை வேந்தரை தேர்வு செய்யும் தேர்வுக்குழுவினை அமைக்க வழிமுறை இல்லை.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்காலம் 17.10.2022 அன்றும், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்காலம் 30.11.2022 அன்றும் முடிவடைந்ததால், தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழகங்களின் விதிகளின்படி நியமனம் செய்யப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலோடு தமிழ்நாடு அரசிதழில் முறையே 20.09.2022 மற்றும் 19.10.2022 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதுவரையில் எந்த ஒரு ஆளுநரும் தன்னிச்சையாக தேடுதல் குழுவினை அமைத்ததில்லை. அதற்கு விதிகளில் வழிவகையும் இல்லை. தேர்வுக்குழு குறித்த விவரங்களை அரசு தான் அரசிதழில் வெளியிடும். இதுநாள் வரையிலும் தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழக சட்டவிதிகளின்படி நியமிக்கப்பட்டு அரசாணை வெளியிட்டு, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது ஆளுநர் அவர்கள் நடைமுறையில் உள்ள பல்கலைக்கழக சட்ட விதிகளுக்கு எதிராக தேடுதல் குழுவை தன்னிச்சையாக முடிவு செய்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார். ஆளுநரால் அமைக்கப்பட்டுள்ள இந்த தேடுதல் குழு முழுக்க முழுக்க பல்கலைக் கழக சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு மாறானது. அரசின் அலுவல் விதிகளின்படி அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும்.

ஆனால் ஆளுநர் தன்னிச்சையாக அறிவிக்கை வெளியிட்டது, மரபு மற்றும் விதிகளுக்கு முரணானது.

தெலுங்கானா மற்றும் குஜராத் மாநில பல்கலைக் கழகங்களில் உள்ளது போல் பல்கலைக்கழக துணைவேந்தரை தெரிவு செய்யும் அதிகாரம் அரசுக்கு அளிக்க வழி வகை செய்யும் சட்ட மசோதா சட்டமன்ற பேரவையில் 25.04.2022 அன்று நிறைவேற்றப்பட்டு, 28.04.2022 அன்று ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இது நாள்வரையில் மேற்படி மசோதாவிற்கு ஆளுநரிடமிருந்து ஒப்புதல் பெறப்படவில்லை. ஆளுநர் தன்னிச்சையாக பாரதியார், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களின் துணைவேந்தரை தெரிவு செய்வதற்கான தேடுதல் குழுவை அமைத்து வெளியிடப்பட்ட அறிக்கையினை அரசு சட்டப்படி எதிர்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

### கடலூர் கிழக்கு மாவட்டம் : ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி

# அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், செப். 8 -

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-



முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு, நேர்காணல் இன்று (8.9.2023 வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் நெய்வேலி டவுன்ஷிப், தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாநில இளைஞரணி நிர்வாகிகள் நேர்காணல் நடத்தவுள்ளனர். ஆகவே, மேற்கண்ட பதவிகளுக்கு விண் ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ள வருகை தரும்போது ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்வி சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, சுயவிவர குறிப்பு, இளைஞரணி போன்ற கழக அமைப்புகளில் பணியாற்றியிருந்தால் அதன் தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்டம்: ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளருக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிவிப்பு!

கடலூர், செப். 8 -

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஒன்றிய, நகர, பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஒன்றிய, நகர, பேரூர்க் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்காணல் இன்று (8.9.2023-வெள்ளிக்கிழமை) மதியம் 2 மணி அளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறுகிறது. மாநில இளைஞரணி



நிர்வாகிகள் நேர்காணல் நடத்த உள்ளனர். ஆகவே மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ள வருகை தரும்பொழுது ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்வி சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, சுயவிவர குறிப்பு இளைஞரணி போன்ற கழக அமைப்புகளில் பணியாற்றி இருந்தால் அதன் தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சைத் திரித்துக் கூறுவதா?

# பா.ஜ.க. தொழில்நுட்ப அணித் தலைவர் மீது வழக்கு!

## திருச்சி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி -காவல் ஆணையரிடம் புகார்!

திருச்சி,செப்.8-

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சை திரித்து வெளியிட்ட அகில இந்திய பா.ஜ.க. தொழில் நுட்ப அணித் தலைவர் மீது திருச்சி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி காவல் துறை ஆணையரிடம் புகார் அளித்துள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 02.09.2023ந்தேதி சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சனாதன தர்மத்தை பற்றி பேசியதாகவும், அவர்பேசிய காணொலியினை டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு பா.ஜ.க.வின் அகில இந்திய தொழில்நுட்ப அணியின் தலைவர் அமித் மாளவியா அவர்கள் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சை திரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதன தர்மத்தை பின்பற்றி வரும் 80 சதவீதம் மக்களின் இன படுகொலைக்கு அழைப்பு விடுத் துள்ளார் என்று பொய் செய்தியினை 02.09.2023ந்தேதி டிவிட்டரில் பதிவிட்டுள்ளதாகவும், இவரின் இந்த பதிவிற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தான் ஒருபோதும் பொதுமக்களின் இனபடுகொலைக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றும், சனாதன தர்மத்தின் கோட்பாடுகளில் ஜாதி மத பாகுபாடுகள் இருக்கிறது என்றும், சமூகநீதி பாதிக்கப்படுகிறது என்றும், அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக பேசி வருவதாகவும், கொரோனா, டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் மனிதர்களுக்கு தீங்கிழைப்பது போல சனாதன தர்மம் சமுதாய தீங்கிற்கு பொறுப்பாகிறது.

எனவே இது போன்ற பொய் செய்திகளை பரப்புவதை நிறுத்தவேண்டும் என்றும், டிவிட்டரில் பதில் பதிவிட்டுள்ளதாகவும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பேச்சின் சாராம்சத்தை தெளிவாக பதிலளித்த பின்பும் அரசியல் உள்நோக்கத்துடன் அரசியல் சுயலாபத்திற்காகவும் அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சை வேண்டுமென்றே திரித்து, தொடர்ந்து இருபிரிவினருக்கு இடையே வன்முறையினை தூண்டும் வகையிலும், மாறுபட்ட கொள்கை கோட்பாடுகளை கொண்ட பல்வேறு பிரிவினருக்கு இடையில் வெறுப்பை தூண்டும் வகையிலும், சகோதரத்துவத்தின் மாண்பினை குலைக்கும் வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வரும் அமித் மாளவியாவும், அவர் தலைமையில் உள்ள பா.ஜ.க. அகில இந்திய தொழில் நுட்ப அணியினரும் இந்த பொய் செய்தியினை தொடர்ந்து பரப்பி வருகின்றனர்.

சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கோரி திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் கே.ஏ.வி. தினகரன். நேற்று 06.09.23 ந்தேதி திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்களிடம் கொடுத்த புகாரின் பேரில் மேற்கண்ட அமித் மாளவியா என்பவர் மீது மாநகர குற்றப்பிரிவில் சட்டப்பிரிவுகள் 153 (கலகத்தை விளைவிக்கும் உட்கருத்தோடு வேண்டுமென்றே செயல்படுதல்), 153 (A) (வெவ்வேறு வகுப்புகளுக்கு இடையே பகையை வளர்த்தலும், ஒற்றுமைக்கு குந்தகமான செய்கைகளை செய்தலும்), 504 (உட்கருத்துடன் அமைதியின்மையை வேண்டுமென்றே நிந்தித்தல்), 505 (1) (b) (பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துதல்) இ.த.ச.வின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### நீலகிரி மாவட்டம்

# குன்னூர் வட்டத்தில் மானியத்துடன் வேளாண் கருவிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, செப்.8-

நீலகிரி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், “கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்” (2023-2024) கீழ், 11 பயனாளிகளுக்கு ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய பவர் டில்லர் / பவர் வீடர்களை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் விவசாயிகளுக்கு வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், இளித்தொரை கிராமத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், “கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின்” கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய பவர் டில்லர் / பவர் வீடர்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (06.09.2023) விவசாயிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்சினி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளின் சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், வேளாண் துறையை தனித்துறையாக அறிவித்து, அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயம் என்பது மிக முக்கியமான ஒரு தொழிலாகும்.

விவசாயத்தை பெருக்க வேண்டும் என்றால் இயந்திரங்கள் பயன்பாட்டினை அதிக அளவில் கொண்டு வர வேண்டும். எனவே தமிழ்நாடு முழுவதும் 5,000 பவர் டில்லர்கள்/ விசைகளையெடுப்பான் கருவிகள் ரூ.41.23 கோடி மானியத்தில் பவர் டில்லர்கள் ஒன்றுக்கு ரூ.85 ஆயிரம் மானியமும், விசை களையெடுப்பான் கருவிக்கு ரூ.63 ஆயிரம் மானியமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பு சிறு குறு விவசாயிகளுக்கு / விசை களையெடுப்பான் கருவிகள் நடைமுறையிலுள்ள மானியத்துடன் 20 சதவீதம் கூடுதல் மானியத்துடன் வழங்கும் பணியினை முதலமைச்சர் அவர்களால் 04-09-2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்தில், இன்றைய தினம் 8 விவசாயிகளுக்கு பவர் டில்லர்களும் மற்றும் 3 விவசாயிகளுக்கு பவர் வீடர்களும், என மொத்தம் ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் வேளாண் கருவிகள் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் மாவட்ட இலக்கிய அணி சார்பில் நடைபெற்ற தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கில் நலத்திட்ட உதவிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாநில இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ.முத்துவளவன் மற்றும் பலர் உள்ளனர்.



மதுரை மாநகராட்சி 1வது மண்டலம் வார்டு எண் 40 ஆவின் நகர் ஜுப்ளி டவுன் பகுதியில் சாலை மேம்பாட்டு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், ஆணையாளர் பிரவீன் குமார், மண்டலத் தலைவர் வாசுகி சசிக்குமார், கண்காணிப்பு பொறியாளர் அரசு, மாமன்ற உறுப்பினர் துரைப்பாண்டியன், பகுதிச் செயலாளர் பாண்டியராஜன் மற்றும் அதிகாரிகள், கழகத்தினர் உள்ளனர்.

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சிந்தனையற்ற முறையில் தாக்குவதால் – பல சிக்கல்களில்

# தனக்குத் தானே சுருக்கிட்டுக் கொள்ளும் பா.ஜ.க.!

## ‘தி வயர்’ இணைய தளத்தில் சிறப்புக் கட்டுரை!

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிந்தனையற்ற முறையில் தாக்குவதால், தனக்குத் தானே சுருக்கிட்டுக் கொள்கிறது பா.ஜ.க. என்று ‘தி வயர்’ இணைய தளத்தில் அதன் ஆசிரியர் (அரசியல்) அஜோய் ஆசிர்வாத் மகாபிரஷஷ்டா எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

‘தி வயரில்’ வெளியான சிறப்புக் கட்டுரை வருமாறு :-

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் சனாதன தருமம் பற்றிக் குறிப்பிட்ட கருத்துகள் அரசியல் புயலைக் கிளப்பியுள்ளன. சனாதன தருமத்துக்கு ஸ்டாலின் தெரிவித்த இந்தக் கண்டனத்தால் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் பலர், திராவிடத் தலைவர் இந்துக்களை பூண்டோடு அழிக்க வேண்டும், இனப்படுகொலை செய்ய வேண்டுமென அழைப்பு விடுத்ததாகக் கூறுகின்றனர்.

எனினும் அரசியல் போரின் கடினமான கட்டத்தில் இந்துத்துவா கருத்தியல் கொள்கையாளர்களுக்கும் சமூக நீதி அரசியலுக்கும் இடையில் ஆழமாக வேரூன்றிய கருத்து வேறுபாடு ஒரு மட்டத்திலும், இந்து வைதீக (பழமைவாத) முறைக்கும் 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளுக்கு மிடையிலான வரலாற்று ரீதியிலான வேறுபாடுகள் இன்னொரு மட்டத்திலும் என இருக்கின்றன.

சனாதன தருமக் கருத்துருவுக்கு கண்டனம் தெரிவிப்பதற்காக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சனாதன ஒழிப்பு மாநாடு செப்டம்பர் 2, சனிக்கிழமையன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் பேசிய உதயநிதி, “சனாதன எதிர்ப்பு மாநாடு என்று பெயர் சூட்டுவதற்குப் பதிலாக சனாதன ஒழிப்பு மாநாடு எனப் பெயரிட்டமைக்காக இந்த மாநாட்டின் அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன்” என்று பேசினார்.

“நாம் சிலவற்றை வெறுமனே எதிர்க்க முடியாது; நாம் ஒழிக்க வேண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன. கொசுக்கள், டெங்கு, கொரோனா, மலேரியா ஆகியவற்றை நாம் எதிர்க்கமுடியாது. அவற்றை முற்றாக ஒழிக்க வேண்டும். சனாதனமும் இதுபோன்றதேயாகும். சனாதனத்தை எதிர்ப்பதல்ல; அழிப்பதே நமது முதல் பணியாக/கடமையாக இருக்க வேண்டும் – என அவர் பேசினார்.

இந்தப் பேச்சு பா.ஜ.க. வினரிடமிருந்து கடுமையான எதிர்விளைவை ஏற்படுத்தியது. அதனுடைய ஐ.டி. பிரிவின் தலைவர் அமித் மால்வியா, உதயநிதியின் பேச்சு “பாரதத்தின் மக்கள் தொகையில் 80% விழுக்காட்டினராக இருக்கக் கூடிய சனாதனிகளை இனப்படுகொலை செய்வதற்கான அழைப்பு” என்று விளக்கமளித்தார்.

இராஜஸ்தானில் தேர்தல் பேரணி ஒன்றில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, இந்தச் செய்தியை புதிதாக அமைக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் இந்தியா (INDIA) கூட்டணிக்கு ஒரு அறைகூவலாக எடுத்துச்சென்றார்.

“ஒரு முதலமைச்சரின் மகன் (உதயநிதியைக் குறிக்கும் வகையில்) அதுவும் தமிழ்நாடு முதலமைச்சரின் மகனாக இருக்கக் கூடியவர் சனாதன தருமத்தை அழிக்க வேண்டுமென அழைப்பு விடுத்திருக்கிறார். வாக்கு வங்கி மற்றும் சமாதானப் படுத்தும் அரசியலுக்காக இவர்கள் சனாதன தரும ஒழிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இது நமது கலாச்சாரம், வரலாறு மற்றும் சனாதன தருமம் ஆகியவற்றைப் புண்படுத்துவதாகும், அவமதிப்பதாகும்.” – இவ்வாறு அமித்ஷா கூறினார்.

உடனடியாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மறுத்து தனது பேச்சு திரித்துக் கூறப்பட்டு வருவதாக பதில் கொடுத்தார்.

“சனாதன தருமத்தைப் பின்பற்றுகின்ற மக்களை இனப்படுகொலை செய்ய வேண்டுமென்று ஒருபோதும் நான் அழைப்பு விடுக்கவில்லை. சனாதன தருமம் என்பது மக்களை சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் பிரிக்கிற ஒரு கொள்கையாகும். சனாதன தருமத்தை வேருடன் பிடுங்கி எறிவது மனிதாபிமானத்தையும் மனித சமத்துவத்தையும் உயர்த்திப் பிடிப்பதாகும்”. – என ஓர் அறிக்கையில் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

“நான் எந்த அறைகூவலையும் அது நீதிமன்றத்திலாக இருந்தாலும், மக்கள் மன்றத்திலாக இருந்தாலும் எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறேன். தவறான செய்திகளைப் பரப்புவதை நிறுத்துங்கள்” என்று கூறியவர், “சனாதன தருமமே பல தீமைகளுக்கும் காரணமாக இருந்தது”. என்றும் தொடர்ந்து கூறினார்.

இந்து மதத்துக்கும் இந்துத்துவத்துக்குமான போட்டியில் தென்னிந்தியாதான் இறுதி எல்லைப் பகுதி. உண்மையில், தமிழ்நாடு அமைச்சர் சனாதன தருமத்துக்கு அவருடைய கருத்தியல் அறைகூவல் / கொள்கை அறை கூவல் மீது விளக்கமளித்து அதே பேச்சில் கூறியவற்றை பா.ஜ.க தனது தாக்குதலுக்காக எடுத்துக் கொண்டது.



ANALYSIS POLITICS

The BJP May End Up Tying Itself in Knots By Attacking Udhayanidhi Stalin

The concept of sanatana dharma was given shape by the Hindu orthodoxy in the 19th century as a movement against reformist organisations like the Arya Samaj and Brahmo Samaj, which questioned regressive practices such as sati and child marriage.

Ajoy Ashirwad Mahaprashasta

POLITICS RELIGION 04/SEP/2023

New Delhi: Tamil Nadu youth welfare and sports minister and Dravida Munnetra Kazhagam (DMK) leader Udhayanidhi Stalin's remarks on *sanatana dharma* have kicked up a political storm. Stalin's criticism of sanatana dharma has led to multiple stalwarts in the ruling Bharatiya Janata Party claiming that the Dravidian leader had called for a "genocide" of the Hindus.

**“சனாதன தருமம் என்பது என்ன? இந்தப் பெயரே சமஸ்கிருதத்திலிருந்து வந்தது. சனாதனமென்பது சமத்துவத்துக்கு, சமூக நீதிக்கு எதிரானது என்பது தவிர வேறுஎன்ன? சனாதனம் என்பதன் பொருள் என்ன? அது நிலையானது மாற்ற முடியாதது; யாரும் அதைக் கேள்வி கேட்கமுடியாது. அதுதான் அதன் பொருள்” என்று உதயநிதி கூறினார்.**

அவர் தொடர்ந்து, “சனாதன தருமம் பெண்களுக்கு என்ன செய்தது? கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளியது [முன்பு இருந்த உடன் கட்டை ஏறும் வழக்கம்] . விதவைப்பெண்களின் தலைகளை மொட்டையடித்து அவர்களை வெள்ளைச் சேலைகளை உடுத்திக்கொள்ளச் செய்தனர், குழந்தைத் திருமணங்களும் கூட நடந்தன” என்று கூறினார்.

**சனாதனத்தின் நெகிழ்ச்சியில்லாத, மாறாத்தன்மையை திராவிடக் கொள்கையுடன் ஒப்பிட்ட, அது சமத்துவத்துக்காகவும் சகோதரத்துவத்துக் காகவும் போராடியதென உதயநிதி கூறினார்.**

**“நம்முடைய தலைவர் கலைஞர் அனைத்து சாதியைச் சேர்ந்தவர்களும் கோவிலில் அர்ச்சராகலாம் என்பதற்கான சட்டத்தை இயற்றினார். நம்முடைய முதலமைச்சர் [ஸ்டாலின்], கோயில்களில் அர்ச்சகர்களாவதற்குப் பயிற்சி பெற்றவர்களை கோயில்களில் பணியமர்த்தினார். இதுதான் திராவிட மாடல்” என உதயநிதி கூறினார்.**

### மனிதர்களிடையே பாகுபாடு!

“திராவிடம் [தி.மு.க.வால் பின்பற்றப்படும் திராவிடக் கொள்கை] என்ன செய்தது? பெண்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யவும், மாணவிகளின் கல்லூரிப் படிப்பிற்காக உதவியாக மாதங்தோறும் ரூ1000 உதவித் தொகை வழங்கியும் திட்டம் தந்தது” –. என அவர் கூறினார்.

இந்தச் சொற்போர் தொடங்கியதிலிருந்து, இந்தப் பேச்சிலிருந்து பின்வாங்க உதயநிதி ஸ்டாலின் மறுத்தார். சனாதன தருமத்தின்மீது தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தி சனாதனக் கொள்கைகளில் மனிதர்களிடையே பாகுபாடு என்பது ஆழப்பதிந்துள்ளது எனக் குற்றம் சாட்டினார்.

இந்தச் செய்தி பிளவுபடுத்தும் மற்றுமொரு அரசியல் பிரச்சினையாக ஆகியிருந்தபோதிலும், பா.ஜ.க.வின் இந்து தேசியவாத அரசியலுக்கும் திராவிடக் கருத்தியலுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் வரலாற்றில் நீண்ட தொலைவு பின்னோக்கிச் செல்கிறது.

### இந்துத்துவ குழுக்களிடமிருந்து முரண்படும் அம்பேத்கரின் பார்வை

சனாதன தருமம் என்பது. சமுதாயங்களுக்கு ‘அவரது (சாதி) கடமைகளை, தொழில்களை, ஒதுக்கீடு செய்து, இந்தியாவில் சாதி முறையை வரையறுப்பதற்காக புகழ்பெற்றது; நம்பிக்கை பெற்றது. சனாதன தரும செயற்பாடுகள், நடைமுறைகள் எப்போதும் மாறாமல் நிலையாக இருக்கும் விதிகளைப் பற்றிப் பேசுகின்றன என திறனாய்வாளர்கள் கூறுகின்றனர். அந்தச் சட்டங்களின் விளைவாக பாகுபடுத்தும் சாதிய பழக்கவழக்கங்கள் நிறுவனப்படுத்த ப் பட்டு, இந்து சமூகத்தில் பார்ப்பனிய மேலாதிக்க நிலையை தொடர்ந்து இருக்கச்செய்தது.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரைப் பொருத்தவரை சனாதனம் என்பது “முரண்டு பிடிக்கும் வைதீக (பழமைவாத) இந்து மதத்தின் பழைய பெயராகும்” – என்றார். 1943ஆம் ஆண்டில், “தீண்டத்தகாதவர்களுக்கு எதிரான இந்துக்களின் சனாதனம் என்பதிலிருந்து கொள்கையளவிலும், விளைவிலும் யூதர்களுக்கு எதிராக நாஜிகளின் செமிட்டிக் இன எதிர்ப்பு எந்த வகையிலும் வேறுபட்டதல்ல.” என்று எழுதினார்.

அண்மைக்காலமாக இந்து எனும் ஒரே தன்மையை நிலைநிறுத்துவதற்காக இந்துத்துவ அமைப்புகள் சனாதன தருமம் என்பதை எங்களின் உதவிக்கு அழைத்துள்ளன. இந்தியா முழுமையும் உள்ள வேறுபட்ட மத நடைமுறைகள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றன. சாதி எதிர்ப்பு அமைப்புகள், இந்துத்துவ சக்திகளால் செய்யப்படும். அப்படிப்பட்ட நிலைநிறுத்தல் முயற்சிகளை இயற்கையாகவே எதிர்த்துள்ளன. தற்காலத்தில் சாதிய முறையை அழியாமல் நிலைத்திருக்கச் செய்தலுக்காக அதற்குக் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளன.

**பா.ஜ.க. தனது அரசியல் வசதிக்கேற்றபடி உதயநிதியின் கூற்றுகளுக்கு விளக்கமளித்திருக்கலாம், ஆனால் அது துன்பங்களின் பிறப்பிடம் எனப்படும் பான்டோரா பெட்டியை (PANDORA’S Box) திறந்துள்ளது. பார்ப்பன பனியாக்களின் கட்சி என்று நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வந்த காவிக் கட்சி இந்த முகவரிச் சீட்டை கழற்றி எறிவதற்கு பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் பிறருடன் உடன்பாடான முயற்சிகளை மேற்கொண்டது.**



**அஜோய் ஆசிர்வாத் மகாபிரஷ்டா**
ஆசிரியர்
(அரசியல் பிரிவு)
‘ தி வயர்’

**இந்துத்துவாவும் சாதி எதிர்ப்பு அரசியலும் ஒன்றுக்கொன்று வரலாற்று ரீதியாக பகையாகவே இருந்துள்ளன. இந்துத்துவம் என்பது பாகுபடுத்துவது உள்ளார்ந்த பார்ப்பனியம் உடையது என்கிற புரிதல், திராவிட, அம்பேத்கரிய மற்றும் மண்டல் (குழு ஆதரவு) கட்சிகளை நீண்ட காலமாக காவிக் குடைக்கு அப்பால் வைத்திருந்தது.**

எனினும், இந்த முரண்பாடுகளை நீக்குவதற்காக, பின்னுக்குத் தள்ளுவதற்காக மோடி அவர்கள் தேசியவாதம், முன்னேற்றம் ஆகியவற்றைச் சுற்றிலும் அரசியல் விளக்கவுரைகளெனும் ஆடையை நெய்தார். வேறு எதையும் விட முஸ்லீம் எதிர்ப்புணர்வுக்கு மிக அதிகமாக எண்ணெய் ஊற்றி வெறுப்பை வளர்ப்பதன் மூலமாக இந்துத்துவத்தைப் பிரபலப்படுத்தலாம் என முடிவு செய்து, அரசியல் தளத்தில் இந்த முரண்பாடுகளுக்குள் செல்ல வேண்டாமென மோடியின் தலைமையின் கீழான பா.ஜ.க. கவனமாக இருந்தது.

உண்மையில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தலித் (தாழ்த்தப்பட்ட) சமூகத்தினரில் கணிசமான பகுதியினரை வெல்வதற்கு கட்சி செய்திட்ட வெற்றிகரமான முயற்சிகள் பா.ஜ.க.வின் அண்மைக்கால வெற்றிக்குக் காரணமாகக் கூறப்பட்டன; மேற்குறிப்பிட்ட பிரிவினரைப் பொருத்தவரை சாதியப் பாகுபாடு என்பது உயிர்வாழும் உண்மையாகும். சனாதன தருமத்தில் உள்ளார்ந்திருக்கும் சாதிய முறைக்கு எதிராகப் பேசிய உதயநிதியின் மீது தாக்குதலைத் தீவிரப்படுத்துவதன் மூலமாக பா.ஜ.க. சமூக நீதி எனும் வாக்கு வன்மைக்கு, பேச்சுத்திறனுக்கு அலட்சியமாக முக்கியத்துவம் கொடுக்கும் இடருக்குள் சிக்கிக் கொள்கிறது. இந்த சமூக நீதி பற்றிய பேச்சுத்திறன் இந்துத்துவத்தை பலமுறை கடந்த காலங்களில் துருப்புச் சீட்டாக இருந்து வீழ்த்தியுள்ளது.

பா.ஜ.க. தமிழ்நாட்டில் கால்பதிக்கும் நோக்கம் கொண்டிருக்கிறது, வெளிப்படையாக இந்துத்தவா கொள்கையைப் பேசுவது பா.ஜ.க.வின் வெற்றி வாய்ப்புக்குக் கேடுவிளைவிப்பதாக இருக்குமென்பதை மாநிலத் தலைவர் (அண்ணாமலை) நன்கு அறிந்திருக்கிறார்.

இந்து சமய வைதீக (பழமைவாத) முறையானது, சமூக சீர்திருத்த அமைப்புகளின் வளர்ந்து வரும் செல்வாக்கினைத் தடுத்திட பாரத் தர்மா மகாமண்டல், சனாதன தருமா, இரக்ஷினி சபா, இலாகூர் சனாதன தரும சபா ஆகிய அமைப்புகளை எற்படுத்தியுள்ளது. இந்தக் குழுக்கள் சனாதன தருமக் கொள்கைகளின்படி இந்து என்கிற ஒரே தன்மையை, அடையாளத்தை ஒரே மாதிரியானதாக ஆக்கிட, தரநிலைப்படுத்திடவும் கூட பெரிதும் முயன்றன.

பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அப்போதிருந்து இந்தக் குழுக்களை நம்பத்தகுந்த ஆலோசகர்களாக எதிர்பார்த்தனர். மோடியும் அமித்ஷாவும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரையும் தாழ்த்தப்பட்ட (தலித்) சமூகத்தினரையும் எட்டிப்பிடித்திருந்த போதிலும், அவற்றின் (பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ்) தற்போதைய இந்துத்துவ ஆதரவு செயல்முறைகள் 19 ஆம் நூற்றாண்டு இந்து சமய வைதீக (பழமை வாத) முறையின் முயற்சிகளை ஒத்திருக்கின்றன.

ஆரியசமாஜம், இராதா சோமிஸ் அல்லது இராம கிருஷ்ண மிஷன் போன்ற சீர்திருத்த அமைப்புகள் அவற்றின் கடந்த 19 ஆம் நூற்றாண்டின் செயல்பாடுகளிலிருந்து வேறுபட்டு உள்ளதாய் இருக்கும் நிலையைப் படிப்படியாகத் தோற்றுவித்தன. இந்த அமைப்புகளை விடவும் பா.ஜ.க.விடம் நெருக்கம் கொண்டன. வைதீக முறைக்கும் இந்தக் குழுக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தற்காலத்தில் சமமாக்கப் பட்டன.

இருப்பினும், சனாதன தருமத்தை வலியுறுத்துவதன் மூலமாக ‘இந்துத்துவ ஒரே தன்மை’ என்கிற அடையாளத்தை நிலைப்படுத்தும் முயற்சியில் தொடருமானால். இரண்டு அமைப்புகளுக்கும் இடையிலான வாலாற்று ரீதியான வேறுபாடு மீண்டும் குறிப்பிடத்தக்கதாக ஆகிவிடும்.

அதுபோலவே, 19 ஆம் நூற்றாண்டின் சமூக சீர்திருத்தவாதிகளான சுவாமி விவேகானந்தரும், நாராயணகுருவும் சங் பரிவாரத்தினரால் இந்து சமயத்தின் தூதுவர்கள் என அடிக்கடி துதி பாடினர்; மேற்கூறிய சீர்திருத்தவாதிகள் சனாதன கொள்கைகளிலுள்ள சாதி நடைமுறைகளை வலிமையாகத் தாக்கிப் பேசினர், செயற்பட்டனர். சனாதன தருமத்தை உதயநிதி ஸ்டாலின் கண்டனம் செய்ததும் துல்லியமாக இந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான்.

அண்மையில் வெளியிடப்பட்ட ‘விவேகானந்தா : சுதந்திரத்தின் தத்துவவாதி’ எனும் நூலின் ஆசிரியர் வி.கோவிந்த் கிருஷ்ணா அவர்கள் ‘தி ஒயர்’ இதழுக்கு பேட்டியளித்தபோது,

**“சத்திரியர்களும், பிராமணர்களும் கீழ்ச்சாதியினரை சமூக, பொருளாதார ரீதியாக அடக்கி ஒடுக்கியதுதான், உலகின் முன்னணி நாகரிகங்களில் ஒன்றாக இருந்த இந்தியாவின் வீழ்ச்சிக்கும் சரிவிற்கும் காரணமாகும் என விவேகானந்தர் கருதினார். மேலை நாடுகளில் சுற்றுப் பயணம் முடித்த பிறகு தென்னிந்தியாவில் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளில், தீண்டாமையை யும் அனைத்து வகையான சாதி உரிமைகளையும் ஒழித்திட அழைப்பு விடுத்தார்” என்று தெரிவித்தார்.**

**இந்தியாவின் நாகரிக வீழ்ச்சிக்கு அயல்நாட்டினரின் படையெடுப்பைக் குறை கூறும் இந்துத்தவ பார்வையை, கருத்தை அவர் தள்ளுபடி செய்தார்.**

**“சாதிக்கு எதிராக கேரளத்தில் ஈழவர் இயக்கம் நடத்திய கட்சி சார்பற்ற முதலாவது இலக்கத்தின் மீது இது மாபெரும் செல்வாக்கு பெற்றது. நாராயண குருவும் விவேகானந்தரும் வேதாந்திகளாக இருந்தமையால் சாதி குறித்து இருவரின் கருத்துகளும், பார்வையும் பெருமளவுக்கு ஒத்திருந்தன. இறுதியாக சாதியானது இந்தியாவிலிருந்து மறைந்து விடுமென விவேகானந்தர் நம்பினார் எனத் தோன்றுகிறது. சாதிப் பாகுபாடுகள் இந்தியாவின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. ஜனநாயகக் கருத்துகள் வளர்ச்சியடையும் பொழுது இறுதியில் சாதி மறைந்துவிடும் என விவேகானந்தர் கூறுகிறார்” என்று கோவிந்த் கிருஷ்ணா மேலும் கூறினார்.**

எனினும், சாதிய நடைமுறைகள், செயற்பாடுகள் எந்த வகையிலும் மறைந்திடவில்லை; தற்கால இந்தியாவின் சமூகத்திலும் அரசியலிலும் கூட ஆழமாக வேரூன்றி இருக்கிறது. உதயநிதியின் குறிப்புரைகள் முன்னோக்கிச் சென்று முக்கியமான பிரச்சினையில் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தப் பிரச்சினைதான் சாதி ஒடுக்கு முறைக்கும், வன்முறைக்கும் உரிமைப் பறிப்புக்கும் வரலாற்று ரீதியான காரணமாக இருந்திருக்கிறது.

சனாதன ஒழிப்பு மாநாட்டில் ‘இந்திய விடுதலைப்போரில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பங்கு என்னும் தலைப்பிலான ஒரு நூலை உதயநிதி வெளியிட்டார். திராவிடத் தலைவர் (உதயநிதி) மீது பா.ஜ.க, தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதற்கு இந்த நூல் வெளியீடும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்த நூலில் காந்தி படுகொலையும், ஒரு மனிதன் காலணியை நக்குவது போன்ற படமும் அட்டைப் படத்தில் முக்கியத்துவமளித்துப் வரையப்பட்டுள்ளன.

அந்த நூலில் உள் பக்கங்கள் சில காலியாக விடப்பட்டிருந்தன. அதில், பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பங்கு மிகமிகக் குறைவே என்பதைக் குறிப்பிடும் வகையில் மூன்று சுழியங்களை (zeros) உதயநிதி வரைந்தார்.

குஜராத் மாநிலத்தில் படோட் பகுதியில் சனாதன தரும ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையிலான குற்றங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. மோடியின் சொந்த மாநிலமும் இந்துத்துவாவின் ஆய்வகமுமாகிய குஜராத்திலேயே கூட எவ்வாறு தொடர்ந்து தகராறுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை அவை விளக்குகின்றன. சாலாங்பூரில், சுவாமி நாராயண் பிரிவினரால், மாபெரும் ஹனுமான் சிலையின் பீடத்தில் ஒரு சுவரோவியம் வைக்கப்பட்டது தான் கருத்து வேறுபாடுகளுக்குக் காரணமாகி தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்திற்கு ஊடகத்தினர் செல்லக் கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.

அம்பேத்கரைக் குறிப்பிட்ட காரியத்துக்கு எடுத்துக் கொண்டு தனது தலித் அரசியலை வெளியே தள்ளிட பா.ஜ.க. முயற்சிப்பதால் பா.ஜ.க.வுக்கு இது பெரும்பிரச்சினையாக சிக்கலாக ஆகிவிடக்கூடும். கருநாடகத்தில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக இருந்த மிகுந்த செல்வாக்குள்ள லிங்காயத்துகளும் இந்த விஷயத்தில் மாறுபட்ட கருத்துகள் கொண்டுள்ளனர்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் துணைப் பிரிவுகளாக ஆக்கிட வகை செய்யும் ரோகினி கமிஷனின் அறிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பீகார் சாதிவாரி கணக்கெடுப்பில் உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய மோடி அரசு ‘யு டர்ன்’ (U Turn) அடித்துள்ளது. இவையிரண்டும் சேர்ந்து இந்திய தேர்தல் அரசியலில் கட்டமைப்புப் பிழையின் விளைவை ஏற்படுத்தும் குற்றக் கோடாக ஆகலாம்.

சிந்தனையற்ற முறையில் உதயநிதி ஸ்டாலினைத் தாக்குவதன் மூலமாக தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஓரங்கட்டப்படும் நிலையைத் தேடி வரவழைத்துக் கொள்கிறது என்பது மாத்திரமல்ல நாட்டின் பிற பகுதிகளிலும் பா.ஜ.க. தன்னைத் தானே பல சிக்கல் முடிச்சுகளில் சுருக்கிட்டுக் கொள்ளும் இடருக்கு ஆட்படுத்திக் கொள்கிறது.

இவ்வாறு ‘தி வயர்’ இணையதள சிறப்புக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் 04.09.2023 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் உள்ளார்.

## இராமநாதபுரம் - முதுகுளத்தூரில் ரூ.7.20 லட்சத்தில்

# மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்!

இராமநாதபுரம்,செப். 8-

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளியில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 247 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டி வழங்கி மாணவ, மாணவிகளின் கல்வி முன்னேற்றத்திற்கு இத்திட்டம் பயனுள்ளதாக இருக்குமென பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளியில் 4.9.2023 அன்று பள்ளி கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், முன்னிலை வகித்தார். பிற்படுத்தப்பட்டோச் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர். ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையேற்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கி பேசுகையில்,

ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். ஒரு மனிதனுக்கு கல்வி ஒன்றே நிலையான சொத்தாகும். ஒருவர் முழுமையான கல்வி பெறுவதன் மூலம் அவர்களுடைய பொருளாதாரம் தானாக வளர்ச்சி பெரும், அந்த அளவிற்கு கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். இக்கல்வியை வசதி படைத்தவர்களுக்கு இணையாக வறுமையில் உள்ளவர்களும் முழுமையாக கல்வியைப் பெற்று பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பள்ளிக்கல்வித்துறைக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி உள்ளார்கள். அதே வழியில் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிக்கல்வித்துறைக்கு மற்ற துறைகளை விட கூடுதலாக நிதி ஒதுக்கீடு வழங்கி அனைவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டு இன்று பள்ளிக்கல்வித்துறையில் தமிழகம் சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது என்றால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களே ஆகும்.

இன்று நகர் பகுதி முதல் கிராம பகுதிகள் வரை அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவ, மாணவிகள் நன்றாக படித்து உயர்கல்வி வரை செல்வது நமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. அதற்கேற்ப மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள் வழிகாட்டுதலை பின்பற்றி நன்றாக படித்து வெற்றி பெற வேண்டும். முன்பெல்லாம் பெண்கள் உயர்கல்வி வரை செல்வது எண்ணிக்கையில் குறைவாக இருந்தது. அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு பள்ளியில் படித்து கல்லூரிகளுக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 (ஆயிரம்) வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள்.

பொதுவாக ஒரு பழமொழி ஒன்று உண்டு. ஆண்கள் படித்தால் அதன் பயன் அவருக்கு மட்டுமே சேரும். ஆனால் பெண்கள் படித்தால் அந்த குடும்பமே பயன்பெறும் என்பது பழமொழி, அதை உறுதிப்படுத்தும் வகையில் உயர் கல்வி வரை படிக்க அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகின்றன. தற்பொழுது கூட 7.5 % சதவீதம் இட ஒதுக்கீடு மருத்துவப்படிப்பிற்கு மட்டுமின்றி பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், போன்றவற்றில் படித்து பயன்பெறும் வகையில் இத்திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சத்துணவில் அனைத்து பள்ளி நாட்களுக்கும் முட்டை வழங்கி சத்தான உணவுகளை பள்ளி பிள்ளைகளுக்கு வழங்கினார். தற்பொழுது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டத்தை வழங்கி முதன்மை முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருந்து வருகிறார். இப்படி கல்வியில் அனைவரும் எவ்வித பாகுபாடுன்றி உயர்கல்வியை பெற வேண்டும் என்பதே அரசின் நோக்கமாக இருந்து அரசின் திட்டங்களை வழங்கி வருகின்றன. எப்படி மாணவ, மாணவிகளுக்கு இடையே வசதி படைத்தவர், வசதி இல்லாதவர்கள் என்ற நிலை தெரியாத வண்ணம். சீருடை அணிந்து எவ்வித பாகுபாடுமின்றி ஒரே மாதிரியாக வந்து கல்வி கற்று செல்கிறார்களோ, அதே போல் அனைவரும் உயர்கல்வி பெற்று சிறந்த சாதனையாளர்களாக உருவாகி பெற்றோர்களுக்கும், நம் பிறந்த ஊருக்கும் பெருமை தேடித் தர வேண்டுமெனத் தெரிவித்தார்,

தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2022 - 2023 ஆம் கல்வியாண்டில் 105 பள்ளிகளில் படிக்கும் 9,936 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்க ஒதுக்கீடு பெற்று இதுவரை 5,091 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளியில் 120 மாணவிகளுக்கும், 127 மாணவர்களுக்கும் என 247 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7,20,325/ மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மற்ற மாணவ, மாணவிகளுக்கும் இந்த மாதம் இறுதிக்குள் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்படும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா, மாவட்ட கல்வி அலுவலர் சுதாகர், முதுகுளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஷாஜகான்,ஒன்றிய செயலாளர்கள் ஆப்பனூர் ஆறுமுகவேல், பூபதி மணி, கோவிந்தராஜ், சாயல்குடி ஜெயபால், தொ.மு.ச. பேரவை செயலாளர் பச்சைமால் மற்றும் பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளி தாளாளர் சாகுல் அமீது, பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் அலாவுதீன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சீவலப்பேரி சாலையில் தாலுகா காவல் நிலையம் அருகில் உள்ள விளையாட்டு கிராமத்தில் உலக தரம் வாய்ந்த பந்தய நீச்சல் குளத்தினை சட்டப்பேரவை உறுதிமொழி குழு தலைவர் தி.வேல்முருகன்,குழு உறுப்பினர்கள் பட்டுக்கோட்டை அண்ணாதுரை,சேலம் மேற்கு அருள்,நாங்குநேரி ரூபி மனோகரன்,அண்ணாநகர் மோகன்,நாமக்கல் ராமலிங்கம், ஆம்பூர் வில்வநாதன், பெருந்துறை ஜெயக்குமார், சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன்,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட கோட்டவிளை பகுதியில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் முன்பக்கம் முதல் வசந்தம் மருத்துவமனை அருகே வரையுள்ள குறுக்கு சாலைகள், கென்னடி தெரு, மீனாட்சி கார்டன் ஆகிய பகுதிகளில் ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# சனாதனம் என்ற மனிதனை மனிதன் தாழ்த்தி வருவதைதான் எதிர்க்கிறோம்!

கோவை
கே.செல்வராஜ்
முன்னாள் எம்.எல்.ஏ.



சனாதனம் என்பது இந்து மதம் அல்ல; இந்து மதத்திற்கும் சனாதனத்திற்கும் தொடர்பு இல்லை. இந்து மக்கள் வழிபடுகிற ஆலயங்களுக்கும், கோவில்களுக்கும் சனாதனத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

தற்பொழுது இந்தியா முழுவதும் மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஒரு தேவையில்லாத விஷயத்தை பி.ஜே.பி. ஏற்படுத்தியுள்ளது. சனாதனம் என்பது ஒட்டுமொத்த மக்கள் மத்தியிலும் தாங்கள்தான் உயர்ந்த ஜாதியினர் நாங்கள் புனிதமானவர்கள் நாங்கள் நடக்கும் தெருவில் மற்றவர்கள் நடக்கக்கூடாது மற்ற சமுதாயத்தினர் மற்ற ஜாதியினர் வரக்கூடாது என்கிற நிலைப்பாட்டில் ஏதோ பெரிய அறிவாளிகளை போலவும், இவர்கள்தான் இந்த நாட்டை காப்பாற்றுபவர்கள் போலவும் இவர்கள்தான் இந்த தேசத்தில் ஏதோ சுதந்திர இந்தியாவுக்கு உழைத்தவர்கள் போலவும் இவர்கள்தான் கலாச்சாரத்தை சமுதாயத்தை உருவாக்கியவர்கள் போலவும் இந்து மதத்தின் சூழ்நிலையை இந்து மதத்தின் புனிதத்தை கெடுக்கிற விதத்தில் ஏதோ பெரிய அறிவாளிகளை போல ஒரு சிலர் சாமியார்கள் வேடம் போட்டுக் கொண்டு புனித தன்மையை கெடுக்கிற செயலில் ஈடுபடுபவர்கள் தான் சனாதனம் பேசுபவர்கள்.

மனிதனை மனிதன் மதிக்காமல் மனிதனை மனிதன் நேசிக்காமல் மனிதனை மனிதன் கேவலமாக இழிவாக பார்ப்பதும் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சாதாரண ஏழை எளிய குடும்பங்கள், கிராமங்களில் வாழ்பவர்கள், விவசாயிகள், பணியாற்றுகிற ஊழியர்கள், கிராமத்து தொழிலாளர்கள் அத்தனை பேரையும் ஏதோ இவர்கள் மட்டும் உயர்ந்த நிலையிலே இருப்பது போலவும் மற்றவர்களெல்லாம் தாழ்ந்தவர்கள் என்கிற நிலையில் யாரையும் மதிக்காமல் இழிவு படுத்தி அவர்கள் செய்கிற தொழிலில் அவர்களே இருக்க வேண்டும் அவர்களே ஈடுபட வேண்டும் என்று ஒரு ஏளனமான நிலைப்பாட்டில் உள்ளவர்கள்தான் சனாதனம் பேசுவார்கள்.

இதெல்லாம் எந்த விதத்தில் நியாயம். பல நூறு ஆண்டுகளாக இவர்களை தவிர யாரும் படிக்கக் கூடாது, வளரக் கூடாது, உயர்ந்த இடத்துக்கு செல்லக்கூடாது அரசு பணியில் இவர்களுக்குள் இவர்களே ஒரு தேர்வு கூட இல்லாமல் இவர்களே தேர்வு செய்து பணியில் அமர்த்தி கொண்டு அரசாங்கப் பணிகளில் எங்கு பார்த்தாலும் இவர்களை தவிர யாரும் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையில் நாடு இருந்தது, தமிழகத்திலும் அப்படித்தான் இருந்து வந்தார்கள்.

மனிதனை மனிதனாக மதியுங்கள், மனிதனுக்கு முக்கியத்துவம் தாருங்கள். சட்டம் என்பது எல்லோருக்கும் பொதுவானது நீதிமன்றம் என்பது எல்லோருக்கும் பொதுவானது, எதற்காக இதில் பிரிவினையாக மக்களை பார்க்கின்ற அந்த கலாச்சாரத்தை தான் எதிர்க்கிறோம். ஒரு பண்பாடற்ற கலாச்சாரத்தை தான் எதிர்க்கிறோம், வேண்டாம் என்று சொல்லுகிறோம்.

ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து ஆளாகி விட்டால் அவன் தாத்தா, அவன் தந்தை, என்ன பதவியில் இருந்தாரோ அந்தப் பதவிக்கு தானும் வரவேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள்.ஒரு தாத்தா ஒரு அப்பா என்ன தொழில் செய்கிறாரோ, அந்த தொழிலையே செய்யுங்கள் இதற்காகத் தான் விஸ்வகர்மா என்று கூறி அதைக் கொண்டு வர பார்க்கிறார்கள். தச்சு வேலை செய்பவர்கள் அந்த ஆசாரிகள் என்பவர்கள் அதே தொழில்தான் செய்ய வேண்டும்.

மலம் அள்ளுபவர்கள் புனிதமானவர்கள் என்றும் அவர்கள் அந்த தொழிலையே செய்ய வேண்டும் என்ன தொழில் யார் செய்கிறார்களோ அவர்களே தான் அந்த தொழிலை செய்ய வேண்டும். அவர்கள் கல்வி அறிவு பெற்று படித்து பட்டம் பெற்று உயர்ந்த நிலைக்கு வரக்கூடாது என்கிற ஒரு நிலைப்பாட்டை இப்பொழுதும் மனதுக்குள் வைத்துக் கொண்டு செயல்படுகிற அந்த சனாதனம் என்கிற அந்த ஒரு வெறி பிடித்த செயலை தான் ஒட்டுமொத்த மக்களும் எதிர்க்கிறார்கள்.

புனிதமான இந்திய நாட்டில் 140 கோடிமக்கள் தொகை கொண்ட நாட்டில் 5சதவீதம் கூட இல்லாத ஒரு சமுதாயம் ஒட்டு மொத்தமக்களையும் அடிமை படுத்த பார்க்கிறது அதை தான் 90சதவீத மக்கள் எதிர்க்கிறார்கள்.

1947ல் சுதந்திரம் பெறுவதற்கு முன்பே நீதிக் கட்சி மக்களை தெளிவான சிந்தனையோடு யாருக்கும் யாரும் அடிமை அல்ல, மனிதனை மனிதனாக மதிக்காவிட்டால் எதிர்த்து போராடு என்று குரல் கொடுத்து தொழிலாளர்கள் 15 மணி நேரம் 16 மணி நேரம் உழைத்து வந்ததை எதிர்த்து குரல் கொடுத்து எட்டு மணி நேரம் உழைத்தால் போதும் என்று இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குறிப்பாக சென்னையில் தான் அந்த நிலைப்பாட்டை உருவாக்கிக் கொடுத்தவர்கள் நீதி கட்சி தலைவர்கள்.

தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு முறையை உருவாக்கியது நீதிக்கட்சி. சாதாரண ஏழை எளியவர்களை அடிமைப் படுத்தி செயல்பட்டு வந்ததை எதிர்த்து குரல் கொடுத்து எல்லோருக்கும் எல்லா உரிமையும் இருக்கிறது, சட்டம் என்பது ஒன்றுதான் என்று அந்தக் காலத்தில் வெள்ளையர் காலத்திலேயே குரல் கொடுத்து மக்களுக்காக உழைத்தது நீதிக்கட்சி. சுதந்திரம் வாங்குவதற்கு முன்பே 20 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்த கட்சி தமிழ் மக்கள் விழிப்புணர்வோடு செயல்பட வைத்து ஜாதி மதத்தின் அடிப்படையில் மக்களை பிரித்துப் பார்ப்பதை எதிர்த்து குரல் கொடுத்து ஒட்டுமொத்த மக்களும் படிப்பதற்கு அரசு பணியில் சேர்வதற்கு அரசியலில் பங்கு பெறுவதற்கு சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக அடித்தட்டு மக்களின் தேர்ந்தெடுக்கிற உரிமையை கொடுத்து மக்களை ஒரு மாபெரும் சக்திகளாக உருவாக்கியவர்கள் அன்றைக்கே நீதி கட்சி ஆட்சி நடத்திவந்தது

அந்த வழியில் வந்து செயல்பாடு கொண்டவர் தான் தந்தை பெரியாரின் திராவிட பாரம்பரியம். அந்த நிலைப்பாட்டில் இருந்து இன்னும் ஒரு படி உயர்ந்து தேர்தல் களத்தில் போட்டியிட்டு மக்களுக்கு உழைக்க வேண்டும் என்று உறுதி பூண்டு செயல்பட்டவர்தான் பேரறிஞர் அண்ணா. அவரோடு இணைந்து கடுமையாக உழைத்து 57 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து தமிழகத்தில் திராவிட ஆட்சியை நடந்தி வருவதற்கு காரணம், மக்களின் விழிப்புணர்ச்சி ஒரு நாளும் தமிழ் மண்ணில் தமிழ் நாட்டில் வேறு எந்த ஒரு கட்சியும் வளரவும் முடியாது, வரவும் முடியாது. இந்த மண்ணே திராவிடமண்.

நான்கு தலைமுறைகளை பார்த்தது திராவிட இயக்கம், தொடர்ந்து இன்னும் தமிழகத்தில் தொடர்ந்து திராவிடம் தான் இருக்கும். 1980 ஆரம்பிக்கப்பட்ட கட்சி தான் பி.ஜே.பி. நூறு ஆண்டுகள் சரித்திரம் படைத்த திராவிட பாரம்பரியத்தை எதிர்த்து விடலாம், அடக்கி விடலாம் என்று நினைப்பதை கனவாக மட்டுமே நீங்கள் காண முடியும். ஒரு நாளும் அது நடக்காது, இந்தியாவில் 1820 லேயே திராவிட இயக்கம் பல பெயர்களில் செயல்பட்டு 200 ஆண்டுகள் பாரம்பரியமிக்கது திராவிட இயக்கம். எத்தனையோ அடக்குமுறைகளை, ஆணவத்தை, அதர்மத்தை, அகம்பாவத்தை, அடக்கி ஒடுக்கி மக்களுக்காக உழைத்து மக்களாட்சி தத்துவத்தை சுதந்திரம் பெறுவதற்கு முன்பே நீதிகட்சி 20 ஆண்டுகால ஆட்சியும் திராவிட இயக்க ஆட்சி 57ஆண்டுகள் மொத்தமாக 75 ஆண்டுகளுக்கு மேலாக மக்களாட்சி தத்துவத்தை தமிழகத்தில் நிலைநாட்டி வருகிறது திராவிடம் என்பதை மற்றவர்கள் மறந்து விடாதீர்கள்.

திராவிட இயக்கம் தி.மு.க. திராவிட மாடல் ஆட்சி என்பது சும்மா வந்ததல்ல. உழைப்பால்வந்தது. வேதனைகளையும் சோதனைகளையும் எதிர்ப்புகளையும் துரோகங்களையும் வென்று இன்று ஆண்டு கொண்டிருக்கிற இயக்கம் தி.மு.க. இதை ஏதோ சாதாரணமாக நினைத்துக் கொண்டு விளையாடி பார்க்காதீர்கள். இந்தியாவில் மாபெரும் வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள், திராவிட பாரம்பரிய மிக்கவர்கள் என்பதனை வெற்றி முரசோடு தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழ்நாட்டு கவர்னராகபணியாற்றிவரும்மேதகு ரவி, தமிழ்நாட்டைச் சார்ந்த மூன்று ஆளுநர்கள் ஆகியோர் அரசியல் சாசன சட்டப்படி எந்த ஒரு அரசியல் கட்சியும் சாராமல் பொது நலனுக்காக நடுநிலையோடு பணியாற்றுவதுதான் அவர்களுடைய கடமை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இவர்கள் மூன்று பேரும் தொலைக்காட்சிகளில் அரசியல் கட்சி உடைய செய்தி தொடர்பாளர்களைப் போல் அரசியல் பேட்டி கொடுப்பது கவர்னராக பணியாற்றுபவர்களுடைய அந்த பதவி ஏற்புக்கும் கடமைக்கும் உரியது அல்ல.

நீங்கள் உங்கள் பதவிகளை ராஜினாமா செய்து விட்டு உங்கள் கட்சியினுடைய செய்தி தொடர்பாளராக செயல்படுங்கள் நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. கவர்னராக இருந்து கொண்டு நீங்கள் பேசுவது அதற்கு அரசியல் ரீதியாக பதில் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்கிற ஜனநாயக மாண்பை மதித்து இதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஏதோ அதி மேதாவி போல் பேசுகிறார் சனாதனம் என்றால் என்ன என்று எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரியுமா? இன்றைக்கு தமிழ்நாட்டில் இந்தியாவிலேயே அதிகமாக படித்தவர்கள் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. தொழில் வளத்தில் சிறப்பாக இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. ஆரோக்கியமாக குழந்தைகள் மகளிர் எல்லோரும் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு சாலை வசதிகள், கல்வி நிலையங்கள், கல்லூரிகள் சிறந்த முறையில் செயல்படுவது தமிழ்நாடு. அதிக பேருந்து வசதி கிராமங்களுக்கும் தொலைதூரப் பகுதிகளுக்கும் நீண்டகாலமாக 1973 இல் இருந்து சிறப்பாக வசதி செய்து கொடுத்திருக்கிற மாநிலம் தமிழ்நாடு. முப்பது சதவீத பெண்கள் கட்டாயம் அரசு பணியில் நியமிக்க வேண்டும் என்கிற தி.மு.க ஆட்சியின் அந்த நிலைப்பாட்டின் மூலம் 30 சதவீத பெண் அதிகாரிகள் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு.

ஆணுக்கிணையாக காவல் துறையிலும் ஆட்சி துறையிலும் பெண்கள் பணியாற்றுகிற மாநிலம் தமிழ்நாடு. இப்படி எல்லா விதத்திலும் உயர்த்து நிற்கிற தமிழ்நாட்டைப் பார்த்து ஏதோ தமிழ்நாடு கெட்டுவிட்டது, தமிழ்நாடு அழிந்துவிட்டது என்று கூக்குரலிடும் எடப்பாடி பழனிச்சாமி அவர்களே, உங்களது ஆட்சியில் பொள்ளாச்சியில், பெண்களை மானபங்கம் படுத்தி வாழ்வை சீரழித்ததும், உங்கள் கட்சித் தலைவராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்து வீட்டிலேயே கொலை கொள்ளை நடந்ததும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் கம்பெனியில் தொழிலாளர்கள் போராட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்தி 13 பேரை சுட்டுக் கொன்றதும், நூற்றுக் கணக்கானவர்கள் உடல் ஊனமாக்கி பணி செய்ய முடியாமல் முடங்கிக் கிடக்கிறார்களே அந்த நிலையை உருவாக்கியது நீங்கள் என்பதை மறந்து விட்டு பேசாதீர்கள்.

2017ல் ஒன்றிய அரசு நீட்டெனும் அரக்கனை நிரந்தரமாக கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வந்த பொழுது மாநிலங்கள் அவையில் பெரும்பான்மை இல்லாத பிஜேபிக்குஆதரவாக அ.தி.மு.க. எம்.பி.க்களை வாக்களிக்காமல் வெளிநடப்பு செய்ய வைத்து நீட்டை இந்தியா முழுவதும் கொண்டு வருவதற்கு துணை போன எடப்பாடி அ.தி.மு.க.வை மக்கள் எப்பொழுதும் மன்னிக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் நாடாளுமன்றத்திற்குள் இருந்து பி.ஜே.பி.க்கு எதிராக வாக்களித்து இருந்தால் நிரந்தரமாக நீட்டு இந்தியாவில் வந்திருக்காது லட்சக்கணக்கான மாணவர்களின் வாழ்வில் மண்ணை அள்ளி போட்டு அவர்களுடைய மருத்துவர்கள் என்கிற எதிர்காலத்தையே வீணடித்த எடப்பாடி அ.தி.மு.க. வை ஒருநாளும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நீங்கள் செய்த அந்த தவறுகளை, ஊழல்களை மோசடிகளை நாங்கள் பேச ஆரம்பித்தால் தமிழ்நாட்டில் நீங்கள் நடமாட முடியாது என்பதை மறந்து விடாதீர்கள்.

விளையாட்டு இளைஞர்கள் நலத்துறை அமைச்சர் - தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதனம் என்கிற செயலுக்குத்தான் ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்கிற நிலைப்பாட்டில்தான் சனாதனம் குறித்து பேசியிருக்கிறார். அவர் எந்த இடத்திலும் இந்து மதத்திற்கு எதிராக ஒரு நாளும் பேசியது இல்லை. அவரும் இந்து தான். தன்னுடைய மதத்தை எப்படி அவர் இழிவு படுத்தி பேசுவார். அது கூட புரியாமல் சிந்தனையும், அறிவும் இல்லாமல் ஒரு சிலர் எதிர்த்து குரல் கொடுக்கிறார்களே, அவர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பேசியதை முழுமையாக கேட்டு படித்து பார்த்து பிறகு கருத்துக்களை சொல்லுங்கள். ஒரு நாளும் எந்த ஒரு இந்திய குடிமகனின் நிலைப்பாட்டில் தனிப்பட்ட முறையில் இழிவு படுத்தியோ கேவலப்படுத்தியோ ஒரு நாளும் பேச மாட்டார். எப்படி பேசுவார். அவர் ஒரு இயக்கத்தினுடைய முன்னணி தலைவராக செயல்பட்டுக் கொண்டிருப்பவர்.

எதிர்கால திராவிட பாரம்பரியத்தின் சிந்தனை சிற்பியாக எழுச்சிமிகு தலைவராக இளைஞர்களின் வீரமிக்க தலைவராக ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பு நிறைந்த தலைவராக செயல்பட்டு வரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிந்தித்து யோசித்து அற்புதமான கருத்துக்களை எடுத்துச் சொல்லுவரே தவிர ஒரு நாளும் அவர் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எங்கும் பேசியது கிடையாது. தவறாக அவர் மீது கருத்துக்களை தெரிவிப்பவர்கள் யோசித்துப் பேசுங்கள். எந்த மதத்துக்கும் எந்த மொழிக்கும் எந்த சமுதாயத்திற்கும் எதிராக ஒரு நாளும் பேசாத ஒரு அற்புதமான உன்னத தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பின்னால் லட்சக்கணக்கான இளைஞர்கள் எழுச்சியோடு உணர்வுபூர்வமாக செயல்படுகிறார்கள் .

அவர் ஒரு தனி மனிதன் அல்ல உதயநிதி ஸ்டாலின் என்பவர் ஒரு இயக்கம். அந்த இயக்கத்தில் இரண்டு கோடி தொண்டர்கள் செயல் பட்டுக் கொண்டிருக்கிற இயக்கம். எப்பொழுது அவரைப் பற்றி பேசினாலும் யோசித்துப் பேசுங்கள், சிந்தித்துப் பேசுங்கள்.

நாங்கள் பேச ஆரம்பித்தால் உங்கள் நிலைமை வேறு மாதிரி ஆகிவிடும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.9.2023) நடிகர் சத்யராஜ் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அண்மையில் மறைந்த அவரது தாயார் நாதாம்பாள் காளிங்கராயர் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அன்றைக்கு நீதிகேட்டு நெடும் பயணம் மேற்கொண்ட வீரமிகு தூத்துக்குடி மண்ணில், இன்றைக்கும் தீரமுடன் கழகப்பணியாற்றி வரும் ஆயிரம் மூத்த முன்னோடிகளுக்கு தூத்துக்குடி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் தலா ரூ.10,000 பொற்கிழியினை இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்களுமான திருமதி கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.



கழக இளைஞர் அணி மாநாட்டை வரலாறு பேசும் வகையில் நடத்துவது குறித்து. தூத்துக்குடியில் நடைபெற்ற தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசு

# அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் அரசு!

## நாடோடி பழங்குடியினருக்கான ஆய்வறிக்கையை வெளியிட்டு - கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

சென்னை, செப். 8 -

அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் அரசாக தமிழ்நாடு அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

சென்னை எழும்பூரில் உள்ள Madras School Of Social Work ல் வானவில் மற்றும் ப்ராக்ஸிஸ் அறக்கட்டளை சார்பில் நேற்று முன்தினம் (06/09/2023) புதன்கிழமை நடந்த நிகழ்வில் தமிழ்நாட்டில் நாடோடி பழங்குடியினரின் நிலை குறித்து எடுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையை வெளியிட்டு, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:-

“வானவில் ஆரம்பித்து 18 ஆண்டுகள் ஆகிறது. ஆரம்பித்து ஒரு வருடம் கழித்து அதாவது 17 ஆண்டுகளுக்கு முன்னால் வானவில் பள்ளியை பார்க்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இன்று எத்தனை பேரின் வாழ்க்கையிலே மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகப்பெரிய மகிழ்ச்சியை அது தருகிறது.

17 வருடங்களுக்கு முன் நான் சந்தித்த பிள்ளைகளில் பலர் இன்று பட்டதாரிகளாக ஆகி வாழ்க்கைப் பாதையையே மாறியிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது... இது மிகப் பெரிய சாதனை. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களுடைய பயணத்திலே இடையிடையே வரக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்ததிலே பெருமையாக நினைக்கிறேன்.

### நாடோடிகளுக்கான தொடர் பிரச்சினை!

இவர்கள் செய்திருக்கக் கூடிய ஆய்வு மிக முக்கியமான ஒன்று. நாடோடி பழங்குடியினர் என்று சொல்லக் கூடியவர்கள் நம் பார்வையிலே பட்டாலும் பல நேரங்களில் நாம் கடந்து சென்றுவிடுகிறோம். நாம் அவர்களை அங்கீகரிப்பதே இல்லை. இது அவர்களுக்கு இருக்கக் கூடிய தொடர் பிரச்சினை.

அவர்களுக்கான அரசியல் குரலை எழுப்ப வைக்க கூடிய அளவுக்கு அவர்கள் எண்ணிக்கையிலே இல்லை. ஆனால் தமிழ்நாட்டுக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அதுமட்டுமே... ஆட்சியாளர்களை, அரசியல் வாதிகளை மக்களின் பக்கம் திருப்பக் கூடிய ஒன்றாக இருந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

மாற்றுத் திறனாளிகளாக இருக்கட்டும், திருநங்கைகளாக இருக்கட்டும், அவர்களுடைய குரலை செவிமடுக்கும் குரலாக எப்போதுமே தலைவர் கலைஞர் அவர்கள் இருந்திருக்கிறார். அவர்கள் சொல்லும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நாடோடி பழங்குடியினர் பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற முனைப்போடு இருக்கிறார்கள். நரிக்குறவர்களாக இருக்கட்டும்... சான்றிதழ்கள் போன்ற எந்த அங்கீகாரமும் இல்லாதவர்களாக இருக்கும் மக்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியோடு இன்றைய தமிழ்நாடு அரசாங்கம் இருக்கிறது என்பதை நான் இங்கு நிச்சயமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால் புரிதல் என்பது மிகப்பெரும் விஷயமாகவே இருக்கிறாது. கிறிஸ்துதாஸ் காந்தி அவர்கள் பேசும் போது, நான் எம்.பி.யாக இருக்கிறேன் என்பதை கொஞ்சம் மறந்துவிட்டு பேசியதாகவே இருந்தது. அதிகாரிகளுக்கே ஒரு மிகப் பெரிய மனத் தடை இருக்கிறது. நாங்கள் போய் தூத்துக்குடி தொகுதியிலே இருக்கக் கூடிய காட்டுநாயக்கர்களுக்கு சான்று வேண்டும் என்று கேட்கும்போது அதிகாரிகள் மிகச் சாதாரணமாக பதிலளித்தார்கள். நானும் கலெக்டரும் அதற்கு சின்ன போராட்டமே நடத்திதான் அதை செய்ய முடிந்தது. இது எவ்வளவு பெரிய சவாலாக இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

### சாதிச் சான்று யாருக்கும் இல்லை!

தொடர்ந்து வழி வழியாக கல்வி வாய்ப்புகளே இல்லாமல் யாருமே படிக்காமல் முதல் முறையாக பள்ளிக் கூடத்துக்கு வந்திருக்கக் கூடிய... முதல் தலைமுறை பட்டதாரி கூட இல்லை, முதல் தலைமுறையாக பள்ளிக்குச் செல்லக் கூடிய ஒரு பிள்ளைகள் இருக்கக் கூடிய சமூகத்திலே யாருக்காவது சாதிச் சான்று இருக்கிறதா என்று தேடினால் யாருக்கும் இல்லை. யாராவது சித்தப்பா, சித்தி, அத்தை ஆகியோருக்கு இருந்தால் அவர்களுக்கு இருக்கிறது அதன் மூலம் இவர்களுக்குத் தாருங்கள் என்று சொல்லி வாங்குவதற்குக் கூட அது எவ்வளவு பெரிய போராட்டமாக இருக்கிறது.

அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள்... இங்குள்ள அதிகாரிகள் இதை செய்ய வேண்டும் என்று நினைத்து போராடும்போதே இவ்வளவு பெரிய சவாலாக இருக்கிறது என்றால்... அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒரு தனி நபர் இதையெல்லாம் பெறுவது என்பது வாழ்நாள் போராட்டமாகவே மாறிவிடுகிறது. சாதிச் சான்றே இப்படி என்றால் ரேஷன் கார்டு, கல்லூரிக்குப் போகவேண்டுமென்றால்...அரசு திட்டங்களை வாங்க வேண்டுமென்றால்.... பாஸ்போர்ட் பெற வேண்டுமென்றால் எவ்வளவு போராட வேண்டியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு அரசு மிகப் பெரிய திட்டத்தைத் தீட்டும்போது அதை எல்லாருக்காகவும் தான் தீட்டுகிறார்கள். எல்லாரும் அதனால் பயனடைய வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். ஆனால், அதைத் தாண்டி சில பேர் அந்த திட்டத்தில் இருந்து விடுபடக் கூடிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது. இப்படிப்பட்ட ஆய்வுகள், இப்படிப்பட்ட சேவைகள் அரசுத் திட்டங்கள் அனைவரையும் உள்ளடக்கிய திட்டங்களாக ஆவதற்காக உதவுகிறது.

காட்டு நாயக்கர்கள் இருக்கிறார்கள் என்றால் ஒரு மாவட்டத்தில் அவர்களுக்கு எஸ்.டி. சர்டிபிகேட் கொடுப்பார்கள். இன்னொரு மாவட்டத்தில் அதை ஒப்புக் கொள்ள மாட்டாகள். சில மாவட்டங்களில் ஒரு தாலுகாவில் கொடுக்கிறார்கள், இன்னொரு தாலுகாவில் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இந்த குழப்பங்கள் களையப்பட்டால்தான் நாம் எல்லாரையும் ஒரே தளத்தில் வைத்துப் பார்க்க முடியும். அதற்கு இப்படிப்பட்ட ஆய்வுகள் மிக மிக முக்கியமானதாக இருக்கிறது. அதை செய்திருக்கக் கூடிய வானவில்லுக்கும், ப்ராக்ஸிஸ் அறக்கட்டளைக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்!

நிச்சயமாக நான் உங்களுக்கான குரலாக ஒலிப்பேன். நீங்கள் இங்கே என்னை மெசஞ்சராக அழைத்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களுடைய ஆய்வுகளை நான் உறுதியாக முதலமைச்சர் அவர்களிடமும் அவர்களின் அலுவலகத்திலும் சேர்த்து... உங்களுடைய கோரிக்கைகளை பரிசீலிக்கச் செய்வேன்.

உங்களுக்குத் தெரியும் இன்றைய தமிழ்நாடு அரசு எல்லோருக்குமான அரசு. எல்லாரையும் ஒருங்கிணைத்து எல்லோருக்கும் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று நினைத்த பெரியாரின் வழியிலே வரக் கூடிய அரசு. இது தமிழ்நாடு மாடலாக மட்டும் முடிந்துவிடாமல் இந்திய அளவிலும் ஒலிக்க வேண்டும். இப்போது இந்தியா என்று சொல்லலாமா என்று ஒரு குழப்பம் எழுந்திருக்கிறது. நமக்கு இது என்றும் இந்தியாதான். ஓர் இந்தியராக இந்த பிரச்சினையை நான் இந்திய நாடாளுமன்றத்திலும் எழுப்புவேன்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி கிறிஸ்துதாஸ் காந்தி, JagNT/DNT தலைவர் டாக்ஸின் பானர்ஜி, ஆதியன் ட்ரிபள் அசோசியேசன் தலைவர் வீரய்யன், வானவில் அறக்கட்டளை நிறுவனர் ரேவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் பெயரை ‘பாரதம்’ என மாற்ற முயற்சி!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, செப். 8 -

ஜி 20 உச்சி மாநாடு வரும் செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ளது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முதல் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் வரை பலரும் பங்கேற்க இருக்கிறார்கள்.

உச்சி மாநாடு தொடங்கும் 9ஆம் தேதி இரவு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருந்து அளிக்க இருக்கிறார். இதற்கான அழைப்பிதழில் ‘பாரத குடியரசு தலைவர்’ ‘President of Bharat’ என அச்சிடப்பட்டிருக்கிறது. வழக்கமாக ‘President of India’ என்றே அச்சிடப்படும் நிலையில், வழக்கத்துக்கு மாறாக இவ்வாறு அச்சிடப்பட்டிருக்கிறது.

‘ஆசியான் இந்தியான்’ உச்சி மாநாட்டிற்கு பிரதமர் மோடி இன்று இந்தோனேசியா செல்கிறார். பிரதமரின் பயண அறிவிப்பிலும் ‘பாரதப் பிரதமர்’ என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த 2022 ஏப்ரல் மாதம் ஹரித்வாரில் நடந்த விழாவில், அகில பாரதிய அஹாரா பரிஷத் தலைவர் சுவாமி ரவிந்திர புரி பேசும் போது, ஜாதக கணிப்புப்படி, அடுத்த 20 அல்லது 25 ஆண்டுகளில் அகண்ட பாரதம் என்ற கனவு நனவாகும் எனக்கூறினார்.



இந்த நிகழ்ச்சியில் பேசிய ஆர் எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், “கடவுள் கிருஷ்ணர் விருப்பப்படி இந்தியா எழுச்சி பெறும் என தத்துவ ஞானி அரவிந்தர் கூறியுள்ளார். இந்தியா குறித்து அரவிந்தர் மற்றும் சுவாமி விவேகானந்தர் கூறியதில் நான் முழு நம்பிக்கை வைத்துள்ளேன். இந்தியா குறித்து சுவாமி ரவிந்திர புரி கூறியதில் முழு நம்பிக்கை உள்ளது. அவர் கூறியது போல் நிச்சயம் நடக்கும். அகண்ட பாரதம் விரைவில் சாத்தியமாகும்” என்று பேசினார்.

கடந்த மே 28ஆம் தேதி இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்பட்டது. அந்தக் கட்டிடத் திற்குள் இடம் பெற்றிருந்த சுவர் ஓவியங்களில் ஒன்று அகண்ட பாரதம் என்பதை சித்தரிக்கிறது.

இதற்கு ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவவாதிகள், “அகண்ட பாரதத்தின் கருத்து பண்டைய பாரத நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளது. சாணக்கியர் பண்டைய காலத்தில் அகண்ட பாரதம் என்ற கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார், அதாவது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் ஒரு அதிகாரத்திற்கும், நிர்வாகத்திற்கும் சொந்தமானதாக இருக்க வேண்டும். உண்மையில், இந்து சித்தாந்த வாதியான வி.டி. சாவர்க்கரும் ‘அகண்ட பாரதம்’ என்ற கருத்தை ஆதரித்தார்” என்று விளக்கம் தருகின்றனர்.

இந்தியாவை ‘பாரதம்’ என்றே அழைக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ், பாஜக கூப்பாடு போடுவதின் உண்மை நோக்கம் என்ன? பரதன் என்ற அரசர் சந்திர குல வம்சத்தைச் சேர்ந்தவன். முதல் சக்கரவர்த்தியாக இந்து தேசத்தை ஆண்டவன் அவன் தானாம்.

தன்னுடைய இராஜ்யத்தில் இந்து தேசத்தின் சகலப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே குடையின் கீழ் ஆண்டான் என்று, மகாபாரதத்தில் ஒரு பாடல் வருகிறது.

எனவேதான் இந்த தேசம் ‘பாரத தேசம்’, பரத கண்டம் அவன் வழி வந்தவர்கள் பாரதியர்கள் என்று புராணங்களின் அடிப்படையிலேயே இவர்கள் வரலாற்றைத் திரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

பாரத தேசம் என்றும், பாரதியம் என்றும் இவர்கள் சொல்வதும் இது இந்துக்களினுடைய நாடு என்பதைத்தான் வெளிப்படையாக பிரகடனப் படுத்திக் கொண்டு இருக்கிறது.

இந்தியாவை ‘இந்தியா’ என்று அவர்கள் ஒப்புக் கொள்ளாத நோக்கத்தை ஆர்.எஸ்.எஸ். குரு கோல்வாக்கர் விளக்கியிருக்கிறார். ‘இந்தியா’ என்றால் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் உள்ளடக்கும். ‘பாரதம்’ என்று சொன்னால் இந்துக்களை மட்டும் தான் குறிக்கும் என்று கூறுகிறார்.

பாரதம் என்று இந்தியாவின் பெயரை மாற்றுவதற்கான முயற்சி என்பது இந்து ராஷ்டிரம் அமைப்பதற்கான முதல் அத்தியாயம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆர். எஸ். எஸ், இந்துத்துவா செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகவே மோடி அரசு இந்தியாவின் பெயரை ‘பாரதம்’ என்று மாற்றுவதற்கு முனைந்திருக்கிறது. இது கடும் கண்டனத்துக்கு உரியது.

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை சீர்குலைக்க நினைக்கும் பாரதிய ஜனதா கட்சியை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவது ஒன்றுதான் இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் ஒரே வழி ஆகும்.

இவ்வாறு வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைக்கு ரூ.10 கோடி அறிவித்த

# அயோத்தியா சாமியார் மீது வழக்குப் பதிவு!

## மதுரை மாநகர் சைபர் கிரைம் காவல் நிலையம் புலன் விசாரணை!

மதுரை, செப். 8 -

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலையை சீவிக் கொண்டு வருபவர்களுக்கு ரூபாய் 10 கோடி தரப்படும் என்று அறிவித்த அயோத்தி சாமியார் சீர் ராமச்சந்திர தாஸ் ஆச்சார்யா மீது மதுரை மாநகர் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்திரபிரதேசம் மாநிலம் அயோத்யாவை சேர்ந்த சாமியார் சீர் ராமச்சந்திர தாஸ் பரம்ஹன்ஸ் ஆச்சார்யா என்பவர் கையில் வாளுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலையை சீவி கொண்டு வருபவருக்கு ரூ.10 கோடி பரிசு அளிப்பதாகவும், அவ்வாறு யாரும் கொண்டு வராதபட்சத்தில் அவரே தலையை சீவி விடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வாளால் குத்தி எரித்தும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தும், வீடியோ பதிவு செய்து வெளியிட்டு, அந்த வீடியோ பதிவை Piyush Rai@benarasiyaa என்பவர் மூலம் சமூக வலைதளத்தில் பரப்பிய செயலானது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் மற்றும் மத இன கலவரத்தை தூண்டும் வகையிலும், மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையிலும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும் உள்ளது என்பதால், மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தி.மு.க மதுரை மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர்.தேவசேனன் நேற்று முன்தினம் (06.09.2023) மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களிடம் புகார் அளித்துள்ளார்.

அப்புகாரின் அடிப்படையில் மதுரை மாநகர சைபர் கிரைம் காவல் நிலையத்தில் மேற்கண்ட எதிரிகளான (1) சீர் ராமச்சந்திர தாஸ் பரம்ஹன்ஸ் ஆச்சார்யா மற்றும் (2) Piyush Rai@benarasiyaa ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவு 153 (கலகத்தை விளைவிக்கும் உட்கருத்தோடு வேண்டுமென்றே செயல்படுதல்), 153 A (வெவ்வேறு வகுப்புகளுக்கிடையே பகையை வளர்த்தலும், ஒற்றுமைக்கு குந்தகமான செய்கைகளை செய்தலும்), 504 (உட்கருத்துடன் அமைதியின்மையை வேண்டுமென்றே நிந்தித்தல்) 505 (1) (b) (பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துதல்), 506 (ii) (கொலை மிரட்டல்) இதன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

# பா.ஜ.க. ஆட்சியில் விலை உயர்வு

மோடி அரசு பதவியேற்றதிலிருந்து அனைத்து உணவுப் பொருட்களும் விலையேறியுள்ளன. இதனை கீழ்கண்ட ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ விவரங்களே பறைசாற்று கின்றன. கடைகளில் இதைவிட அதிகமாகவே விலைகள் இருக்கும் என்பதை கூறத்தேவை இல்லை.

| பொருள் | 01.05.2014 அன்று விலை/ரூ | 23.08.2023 அன்று விலை/ரூ | விலை உயர்வு |
|---|---|---|---|
| அரிசி | 29 | 53 | 84% |
| கோதுமை | 20 | 42 | 111% |
| கோதுமை மாவு | 21 | 48 | 127% |
| கடலை பருப்பு | 50 | 83 | 66% |
| துவரம் பருப்பு | 75 | 153 | 104% |
| உளுத்தம் பருப்பு | 71 | 131 | 84% |
| பாசிப்பருப்பு | 101 | 120 | 18% |
| சர்க்கரை | 37 | 42 | 13% |
| பால் | 36 | 51 | 43% |
| கடலை எண்ணெய் | 159 | 195 | 23% |
| கடுகு எண்ணெய் | 102 | 180 | 77% |
| வனஸ்பதி | 87 | 130 | 49% |
| சோயா எண்ணெய் | 96 | 144 | 50% |
| சூரிய காந்தி எண்ணெய் | 106 | 121 | 14% |
| பாமாயில் | 80 | 98 | 23% |
| வெல்லம் | 38 | 56 | 46% |
| தேயிலை | 215 | 283 | 32% |
| உப்பு(அயோடின்) | 17 | 20 | 17% |
| உருளை கிழங்கு | 23 | 33 | 44% |
| வெங்காயம் | 21 | 34 | 61% |
| தக்காளி | 8 | 50 | 523% |

மேலும் பெட்ரோல்/டீசல்/சமையல் வாயு விலைகளும் மோடி ஆட்சியில் தாறுமாறாக ஏறியுள்ளன. மோடி அரசாங்கம் 2014ல் பதவியேற்ற பொழுது 14.2 கிலோ எடையுள்ள சமையல் எரிவாயு விலை உருளை ஒன்றுக்கு ரூ.410 ஆக இருந்தது(மானியம் உட்பட). இது 2018ல் ரூ.838 ஆக உயர்ந்தது. ஆனால் 2019 தேர்தல் காலத்தில் 590 ஆக குறைக்கப்பட்டது. மீண்டும் 2023 ஆகஸ்டில் 1118ஆக உயர்ந்தது. 2024 தேர்தல் என்பதால் ரூ.200 குறைக்கப்பட்டுள்ளது.

தனது சூழ்ச்சியை மக்கள் உணரமாட்டார்கள் என பா.ஜ.க. அரசு மனப்பால் குடிக்கிறது போலும்.

நன்றி:
**தீக்கதிர்**
05.09.2023

# திராவிட சினிமா

22

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



படங்கள் உதவி : ஞானம்



## காஞ்சித் தலைவன்: மாநில உரிமைக்கான விதை!

*1963-ஆம் ஆண்டில் வெளிவந்த திராவிட சினிமா 'காஞ்சித் தலைவன்'. இந்தத் திரைப்படம் பேசிய அரசியலும், திரைப்படம் தொடர்பான அரசியலும் வரலாற்று முக்கியமானவை. 'காஞ்சித் தலைவன்' என்ற தலைப்பு யாரைக் குறிப்பிடுகிறது என்பதை விளக்க வேண்டியதில்லை. படத்திலும் நூற்றுக்கும் மேலான முறை 'அண்ணா' என்று விளிக்கப்படுகிறது.*

*இதோ நரசிம்மன் அவையில் பிரவேசிப்பதற்கு முன்னரான வீரனின் அறிவிப்பு, "பகை முடித்து நகை முழக்கும் பெரு வீரம் ! நாட்டிற்கு மன்னன் நல்லோர்க்கு அண்ணன்". தாங்குமா தணிக்கைக் குழு?*

*இதைப் புரிந்து கொண்ட திரைப்படத் தணிக்கைக் குழு கண்ணில் விளக்கெண்ணை ஊற்றிக்கொண்டு பார்த்துக் கொடுத்த தொல்லை சொல்லி மாளாது என்கிறார், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த பல ஆய்வுகளைச் செய்த ஆங்கிலேய ஆய்வாளர் ராபர்ட் ஹார்ட்கிரேவ்.*

*'தணிக்கைக் குழு திரைப்படத்தைக் குதறிவிட்டது' என்கிறார். தலைப்பைப் போலவே உருவாக்கப் பட்டியலில் கதை, திரைக்கதை, வசனம் மு.கருணாநிதி எம்.எல்.ஏ, நாயக நடிகர்கள் எம்.ஜி.ராமச்சந்திரன் எம்.எல்.சி, எஸ்.எஸ்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ.*

*கலைஞர் 1957-இல் இருந்தே எம்.எல்.ஏ.தான். ஆனால், இத்தனை சட்டமன்ற மேலவை, கீழவை உறுப்பினர்கள் பங்கேற்ற திரைப்படம் இதுவே முதல்முறை. தயாரிப்பு, மேகலா பிக்சர்ஸ்.*

### அசல் திராவிட சினிமா!

*வரலாறு என்ற முறையில், இந்தத் திரைப்படம் ஒரு புதிய கதைக்களத்தைப் பேசியது. கலைஞரின் இதுவரையான வரலாறுகள், பெரும்பான்மையாக, தமிழ் நில எல்லையின் தொல் பழம் அடையாளங் களைப் புனைந்து கொண்டவை. இந்தத் திரைப்படம்தான் அசலான நில எல்லைகளையும் மன்னர்களையும் வைத்து, ஒரு வரலாற்றுப் புனைவினைக் கொண்டிருந்தது.*

*நரசிம்ம பல்லவன், சாளுக்கிய புலிகேசி, இளவரசி சோழகுமாரி (பல்லவ நாட்டை அடுத்து தற்போதைய ஆந்திர சித்தூர், நெல்லூர் பகுதிகளை ஆண்ட, சோழர்கள். ஆம், தெலுங்குச் சோழர்கள்) என திராவிட எல்லைகளைத் தொட்டு விரிந்தி ருந்தது. ஆனாலும், கொள்ளிடக்கரை முத்தரையர், உறையூர் சோழர், கொடும்பாளூர் வேந்தரும் உண்டு. போதாக்குறைக்கு இலங்கையின் மன்னன் மானவர்மனும் உண்டு. எனவேதான் இந்தத் திரைப்படத்தை அசலான திராவிட சினிமா என்றேன்.*

**இந்தத் திரைப்படம்தான் அசலான நில எல்லைகளையும் மன்னர்களையும் வைத்து, ஒரு வரலாற்றுப் புனைவினைக் கொண்டிருந்தது.**

### காஞ்சியும் காதலும்

*களம் விரிந்து பரந்தது என்றாலும், கதை எளிமையானதுதான். காஞ்சியை வெல்லும் புலிகேசியின் பேராவலும், அதனை எதிர்கொண்டு முறியடிக்கும் நரசிம்ம பல்லவனின் தீரமுமே கதை. புலிகேசி சதியின் கைப்பாவையாக வரும் சோழகுமாரி, பல்லவனிடம் காதல் கொள்கிறாள்.*

*அந்தக் காதல் நரசிம்ம பல்லவனைப் பலவீனமாக்குகிறது. அதாவது பல்லவனின் படைத் துணையான தமிழ் குறுநில மன்னர்களும், தளபதி பரஞ்சோதியும் அதனை ஏற்க மறுக்கிறார்கள். கொள்ளிடக்கரை முத்தரையர் மகளை மணக்கும் ஒப்பந்தத்தை மீறுவதால் பல்லவனின் உறவை முறித்துக் கொள்கிறார்கள்.*

*நரசிம்மனின் தங்கை பூங்கோதையின் உயிர்த் தியாகமும், சோழகுமாரியின் காதல் தியாகமும் வெற்றிக்கு வழிகோலுகின்றன. இறுதியில் முத்தரையர், சோழகுமாரியை மகளாய் ஏற்று மணமுடித்து வைக்கிறார். மணவிழா 'மணமக்கள் வாழ்க' எனும் சுயமரியாதை வாழ்த்தை முழங்கி, மாலை அணிவிப்பதோடு முடிகிறது.*

### சமகாலமும் சரித்திர காலமும்

*கலைஞரின் வரலாற்றுப் புனைவில் சமகாலமும், சரித்திர காலமும் பின்னிப் பிணைந்து கதைக் களமாகிறது. காஞ்சியில் மதவாதமும் சமயபேதமும் ஏற்பட்டு அமளியாவது பேசப்படுகிறது. காஞ்சி எனும் தொல் நகரம் சமயங்கள் மலர்ந்த, வளர்ந்த, வாழ்ந்த, சமர் செய்த களம் என்பதால், காலம் எனும் தடுப்புச் சுவர் கரைந்து மறைந்து போகிறது.*

*சமண- பௌத்த சமயக் குழப்பமும், திருநாவுக்கரச ருக்கும் திருமழிசை ஆழ்வாருக்குமான சைவ - வைணவக் குழப்பமும் ஏக காலத்தில் நிகழ்கின்றன. அதாவது 1960-களின் சமயவாதிகள் காலாதீத மான போக்குகளின் தொடர்ச்சியாகச் சித்தரிக்கப்பட வேண்டியதன் பொருட்டு, இந்த உத்தி.* ***சீனப் பயணி யுவான் சுவாங்*** *மன்னரவைக்கு வருகிறார். சாளுக்கிய வாதாபியில், நரசிம்மனின் தந்தை மகேந்திரவர்மன் குறித்த அவதூறு கல்வெட்டைக் கண்டதாகப் பேசுகிறார்.*

### தெற்கு-வடக்கு முரண்

*1963-ஆம் ஆண்டு, 'திராவிட நாட்டிற்கான' காரணங்கள் அப்படியே இருந்தாலும் (இன்றும் தொடர்கிறது என்பதுதான் வேதனை), அரசியலமைப்புச் சட்டத்தினை வேறு வகையின்றி ஏற்று, தனிநாடு கோரிக்கையைக் கைவிட்ட காலம். அண்ணா நாடாளுமன்றத்தில் திராவிடம் முழங்க வாய்ப்பளித்த காலம். சீனப் போரால் இந்தியா துவண்டிருந்த காலம். இந்தக் காலவெளியைப் புனைவாகப் பிரதிநிதித்துவப்படுத்த கலைஞர் கண்டடைந்த களம் பல்லவர் - சாளுக்கிய முரண்.*

*கி.பி. ஆறாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினொன்று வரை, பாதாமியை தலைநகராகக் கொண்டு இன்றைய கர்நாடகாவின் பெரும்பகுதி தொடங்கி மராட்டியம் உள்ளிட்ட மத்திய இந்திய நிலப்பகுதிகளை ஆண்டனர் புலிகேசி தலைமையிலான சாளுக்கியர்கள். எனவே, ஒருவகையில் புலிகேசி திராவிட நாடு கடந்த நிலப்பகுதியிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளன். போரிலும் கூடச் சாளுக்கிய புலிகேசி 'ஜெய் வாதாபி' என்றும், பல்லவன் 'வெல்க நாடு' எனவும் முழங்குகின்றனர். எனவே, ஒருநிலையில் தெற்கு வடக்கு முரணை / மோதலைப் பேசியது என்பதும் சரியே.*

### அரசியல் உரிமைக்கு விதை

*சாளுக்கியச் சதிவலையைப் பின்னிட வரும் பூவிக்கிரமனாக (மதனன் எனக் காஞ்சியில் பெயர்) எம்.ஆர்.ராதா அவர்கள். கலைஞரின் நையாண்டி உரையாடலை ராதா அவர்கள் தன் போக்கில் பேசியவிதம் சுவாரஸ்யமானது. சோழகுமாரியின் செயல்களில் நம்பிக்கையிழக்கும் பூவிக்கிரமன் அவளைச் சந்தேகிக்கிறான். அதனை மதுரம் அவர்கள், 'ஸ்திரீ சாகசம்' என்கிறார். ராதா, 'ஸ்திரீயா? பாம்புச் சத்தம் மாதிரியில்ல இருக்கு. பாம்புப் பல்லு பட்டால்தான் விஷம். ஸ்திரீ பார்த்தாலே விஷமாச்சே ' என்கிறார்.*

*பலமுறை மயக்கும் விஷத்தை வைத்து சதி செய்பவர், ஒருமுறை நின்று நிதானமாகக் கொல்லும் விஷத்தை 'தெய்வ விஷம்' என்கிறார். சீன வியாபாரியிடம் வெடிமருந்து வாங்கும் போது, 'எங்க நாட்ல இதச் செய்ய புத்தி வளரல......' என்பவர் கூடவே, 'இப்ப நல்ல வனாகத்தான் தெரியுறான். பின்னாடி என்ன செய்யப் போறானோ" என்று சீனப் போருக்கான வாய்ப்பைப் பேசுகிறார்.*

*திரைப்படம் வெளிவந்த பிறகான அரசியல் விபரீதமானது. வாதாபியை வெல்லும் பல்லவன், புலிகேசி கொடியைச் சாய்த்து பல்லவர் கொடியை ஏற்றுகிறான். கர்நாடகத்தில், கன்னட மொழி சார்பான விரோத மனம் கொண்ட அமைப்பினர், 'காஞ்சித் தலைவன்' படக்காட்சியின் சாளுக்கியக் கொடிச் சாய்ப்பை கன்னடக் கொடிச் சாய்ப்பாக்கி அரசியல் செய்தனர். படத்தின் சிறப்புக் காட்சியைப் பார்த்தும் திருப்தி அடையவில்லை மொழி அபிமானம். அதன் விளைவாக,* ***'கன்னட சலுவாலியா'*** *அமைப்பும், கர்நாடகத்தின் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடியும் உருவானது.* ***'காஞ்சித் தலைவன்'*** *மொழிவாரி மாநிலங்களின் உரிமை அரசியலுக்கு விதை போட்ட வரலாற்றுப் படமும் ஆனது.*

...படம் விரியும்

## ஆசிரியர்களும் கற்றுக்கொள்ள வேண்டும்!





**க**ற்பித்தலின் புத்தாக்க முயற்சிகளுக்கு முன்னாடியாக இருக்கிறார், தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் அரசு மேனிலைப் பள்ளி ஆசிரியர் மாலதி. வேதியியல் பட்டதாரி ஆசிரியரான அவர், கலைகள் முதல் ரோபோட்டிக்ஸ் வரை பல்வேறு வகைகளில் மாணவர்களுக்கு அறிவியலைக் கற்றுக் கொடுத்து வருகிறார். கொரோனா தொற்றுக் காலத்தில் தனது சொந்த முயற்சியில் 500 நாட்களுக்கும் மேலாக மாணவர்களுக்கு ஆன்-லைன் வகுப்புகள் எடுத்ததுடன், தொடர்ந்து 26 மணி நேரம் வகுப்புகள் எடுத்தும் சாதனை செய்துள்ளார். தவிர, தனது மாணவர்கள் நான்கு பேர் அறிவியலில் சாதனை படைக்கவும் உதவியுள்ளார்.

அறிவியலை மாணவர்கள் விருப்பப் பாடமாகக் கற்க வேண்டும் என்பதற்காக, பல முயற்சிகளையும் செய்து பார்க்கிறார் மாலதி. அதனாலயே கடினமான பாடங்களையும் எளிதாகக் கற்றுக் கொடுப்பவர் என்கிற பெயர் எடுத்துள்ளார். தமிழ்நாடு அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வாங்கிய அவருக்கு, இந்த ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருது அளிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் கற்கவேண்டும் என்பதற்கு ஆசிரியர் மாலதியே பாடம். அரசுப் பள்ளி மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதும் நம் பெருமை.

## :ப்ளாஷ்பேக்



### சிரிப்பில் உற்சாகம்!



நெடுஞ்செழியன்-
கற்பகம்

1984-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி எனது திருமணம், தலைவர் கலைஞர் நடத்தி வைக்க கோபாலபுரம் இல்லத்தில் நடைபெற்றது. அழைப்பிதழில் என் பெயரைக் கண்ட தலைவர் அவர்கள், நேரில் பார்த்ததும் 'உன் பெயர் என்ன?' என்று சிரித்துக் கொண்டே மூன்று முறை கேட்டார். 'நெடுஞ் செழியன்' என்றேன். மூன்று முறையும், சுற்றி இருந்த அனை வரும் சிரித்து உற்சாகமடைந் தார்கள். அந்தச் சிரிப்பு இன்றும் என் கண் முன்னே நிழலாடுகிறது. அன்றைக்கு வார்டு இளைஞர் அணி செயலாளராக இருந்த நான், தற்போது பகுதிப் பிரதிநிதி யாகப் பாதை மாறாமல் பயணித்து வருகிறேன்.

**-கோ.நெடுஞ்செழியன்,**
**பகுதிப் பிரதிநிதி,**
**மாதவரம் தெற்குப் பகுதி,**
**சென்னை வட கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### கட்டளைமொழி கட்டாயம்!

**1968-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார் பேரறிஞர் அண்ணா. அதுவரை தமிழ்நாடு தேசிய மாணவர் பயிற்சிப் படையில் (என்.சி.சி) இந்தி கட்டளைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இருமொழிக் கொள்கையை ஏற்க வில்லை என்பதால், என்.சி.சி செயல்படாமல் முடங்கியது. அதன் பின்னர் கலைஞர் ஆட்சியின்போது, என்.சி.சி படையின் கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு, 1969-ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் செயல்படத் தொடங்கியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

234




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.